விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 17 சனிக்கிழமை (03.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 289

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

அமெரிக்க ஜனாதிபதி
## ட்ரம்புக்கு கொரோனா
அவரது மனைவிக்கும் தொற்று உறுதி



23

இந்தியாவின் ஒத்துழைப்புடனே தமிழருக்குத் தீர்வு

## வடக்கு - கிழக்கில் சமஷ்டி நிறுவப்படும்வரை மாகாண சபையை நீக்குவது தற்கொலைக்குச் சமன்

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

முழுமையான சமஷ்டி முறையிலான பொறிமுறையொன்று வடக்கு - கிழக்கில் நிறுவப்படும் வரை வடக்கு - கிழக்கு மாகாண சபைகளை நீக்குவது தற்கொலைக்கு சமமாகும் என வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

**கேள்வி:** இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத் 23

# காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிநாட்டில் உள்ளனராம்!

யாழில் அமைச்சர் ஹெகலிய



**(யாழ்ப்பாணம்)**

**யுத்தத்தின்போதும் யுத்த காலப் பகுதியிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் என தமிழ் மக்களால் கூறப்படுபவர்கள் விசா எடுத்து தற்போது வெளிநாடுகளில் வசித்து வருவதாக ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்த அமைச்சர் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், "வடக்கு - கிழக்கு மக்கள் 30 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

30 ஆண்டுகால யுத்தம் என்பது சுலபமானதல்ல. யுத்த காலத்தின்போது காணாமல்போனவர்கள், மரணித்தவர்கள் பற்றி சில தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

குறிப்பாக காணாமல்போனவர்கள் என்று கூறப்படுபவர்களில் சிலர் விசா எடுத்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அதுமட்டுமல்லாது வேறு சிலர தங்களது வீட்டு முகவரிகளை பிழையாகக் 02

## தமிழரசுக் கட்சியின் செயலாளராக சத்தியலிங்கம் தெரிவு

(வவுனியா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளராக செயற்பட்டு வந்த முன்னாள் 23

## நாடளாவிய ரீதியில் மதுச்சாலைகள் இன்று பூட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபான சாலைகளையும் இன்றைய தினம் மூடுமாறு மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த விதிமுறைகளை மீறு 23

## மூவின மக்களையும் வீதியில் இறக்கி 20க்கு எதிராக போராடுவோம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்

(கொழும்பு)

இலங்கையின் ஜனநாயகத்துக்கு உலைவைக்கக் காத்திருக்கின்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைபை மக்களே வீதியில் இறங்கி தோற்கடிக்க வேண்டும்.

நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள இந்த எதிரப்புப் போராட்டங்களில் மூவின மக்களும் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுத்துள் 23

## தமிழரைப் பொறுத்தவரை 'திலீபன்' என்றும் தியாகியே

ஹெகலியவின் முகத்தில் அறைந்ததுபோல் நேரில் தெரிவித்த யாழ்.ஊடகவியலாளர்

(யாழ்ப்பாணம்)

"தியாகி திலீபன் உங்களுக்கு வேண்டுமானால் பயங்கரவாதியாக இருக்கலாம்.

ஆனால், எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்களுக்கு அவர் தியாகி. தமிழ் மக்களுக்காகவே அவர் போராடி 23

## அனைத்துலக அரங்குடன் தொடர்பாடல் மேற்கொண்டு தமிழருக்கு அனுசரணை செய்யத் தயார்

எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழத் தமிழ் மக்கள், அனைத்துலக அரங்குடன் தொடர்பாடலை மேற்கொள்ள தான் அனுசரணைப் பணியை செய்யத் தயார் என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான அனுசரணையாளரும் முன்னாள் அரசியல்வாதியுமான எரிக் சொல்ஹெய்ம் 02

## 20ஆவது திருத்தம் திங்கள் மீண்டும் விசாரணை

(கொழும்பு)

20ஆவது திருத்த வரைபிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 39 மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் திங்கட் 23

## இருவேறு விபத்து; இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இரு வேறு விபத்துக்களில் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

தேராவில் துயிலும் இல்லத்துக்கு அருகாமையில் கடந்த 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தையும் மகனும் லொறியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 24

# 20 ஆம் திருத்தத்தை தோற்கடிப்பது மக்களின் கைகளிலேயே உள்ளது

## அரசியல் குழு உறுப்பினர் கே. டி லால்காந்

(கொழும்பு)

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 20ஆம் திருத்த சட்ட மூலத்தை தோற்கடிக்க மக்களினால் மாத்திரமே முடியுமென மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

· இவ்விடயம் தொடர்பாக லால்காந் மேலும் கூறியுள்ளதாவது, "அரசியலமைப்பின் 20வது திருத்தத்தை, நீதித்துறை செயல்முறை ஊடாக ஒருபோதும் தோற்கடிக்க முடியாது.

அதனை, மக்களின் சக்தியால் மாத்திரமே செய்ய முடியும். மேலும், நீதிமன்ற தீர்ப்பு அரசியலமைப்பின் கட்டுரைகளுக்கு மட்டுமே பொருத்தமான அளவுகோல்களை சுட்டிக்காட்டுகிறது.

ஜே.வி.பி நாட்டில் எழும் ஒவ்வொரு பிரச்சினையிலும் மக்களுடனே இருக்கும். நீதிமன்றத்திற்கு .செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

20ஆவது திருத்தம் ஏற்படுத்தும் சேதத்தை பெரும்பான்மையின மக்களை புரிந்துகொள்ளச் செய்ய முடிந்தால், வெற்றிகரமாக தோற்கடிக்க முடியும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# பருத்தித்துறை முனையிலிருந்து தெய்வேந்திர முனைவரை

## துவிச்சக்கரவண்டி பவனி

(கரணவாய்)

மாற்றுத்திறனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிதி திரட்டும் முகமாக வடக்கின் பருத்தித்துறை முனையில் இருந்து தெற்கின் தெய்வேந்திரமுனை வரை துவிச்சக்கரவண்டி பவனி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை (02) அதிகாலை 5.50 மணி அளவில் பருத்தித்துறை சாக்கோட்டை கொடிக்கம்பத்தில் இருந்து இந்த துவிச்சக்கரவண்டி பவனி ஆரம்பமான போது 551 ஆம் படைப் பிரிவின் பிரிகேடியர் பிரேமரத்ன துவிச்சக்கரவண்டியோட்ட வீர,வீராங்கனைகளிற்கு கைலாகு கொடுத்து அனுப்பி வைத்தார்.

துவிச்சக்கர வண்டிப் பவனி பிரதான வீதி ஊடாக கொடிகாமத்தை சென்றடைந்து .அங்கிருந்து ஏ-9 வீதி ஊடாக 600 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து தெய்வேந்திரமுனையை சென்றடையும். (ம-03,60)

**விற்பனைக்கு**

பாவித்த மரக்கட்டில்கள், மெத்தைகள், சாப்பாட்டு மேசைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், செரமிக் கப்புகள், சாப்பாட்டுத் தட்டுகள் விற்பனைக்கு உண்டு. (C-461)

**077 711 0287**

## அனைத்துலக...

தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்கள் வன்முறையற்ற வழியில் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தினால் அந்த அனுசரனையைத் தான் செய்வதற்குத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஈழத்தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு ஒற்றுமைப்பட்ட ஒரு தளத்தில் நிற்கவேண்டியது அவசியமென்றும் அவர் சுட்டிக்காண்பித்துள்ளார்.

எரிக்சொல்ஹெய்ம் மற்றும் பிரான்ஸ் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி கிருபாகரன் ஆகியோருடன் நடத்திய நேர்காணல் நிகழ்வின் போது இந்தக்கருத்தை வெளியிட்டஅவர் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்கவேண்டுமானால் இந்த விடயம் முக்கியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழ் பிரதிநிதித்துவ அரசியலில் முக்கியபாகத்தை கொண்டுள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பும் ஏனைய தமிழ் கட்சிகளும் இதனைவிட இலங்கைபிரச்சினையில் சற்று வித்தியாசமான பார்வையை கொண்டுள்ள புலம்பெயர் தமிழ்சமூகமும் இந்த விடயத்தில் ஒன்று பட்டு நின்றால் அதன் பெறுபேறு காத்திரமாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதனைவிட முஸ்லிம் மக்கள் மற்றும் சிங்கள முற்போக்கு சக்திகளுடனும் தமிழ்மக்கள் அரசியல் தொடர்பாடலை கொண்டிருக்கவேண்டுமெனவும் இவ்வாறான ஒரு புள்ளி உருவாகி ஜனநாயக வழிமுறையில் தமிழ்மக்களின் கோரிக்கை விடுக்கபட்டால் அதற்கு மேற்குலகம் உதவும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ்மக்கள் வன்முறையற்ற வழியில் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தினால் அனைத்துலக அரங்குடன் அவர்கள் தொடர்பாடலை மேற்கொள்ள தான் அனுசரணைப்பணியை செய்யத்தயார்எனவும் எரிக்சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார் அத்துடன் இவ்வாறன அனுசரணைபணிக்காக விமர்சனங்கள் முன்வைக்கபடுவதாகவும் அவர் ஒரு கட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்

இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக பத்து தமிழ் கட்சிகளின் அழைப்பில் தமிழர் தாயக பகுதிகளில் நேற்று அறவழி இயல்பு வாழ்வு முடக்கப்போராட்டம் நடத் தப்பட்டநிலையில் ஜனநாயக வழிமுறை யில் தமிழ்மக்களின் கோரிக்கை விடு க்கபட்டால் அதற்கு மேற்குலகம் உதவும் என எரிக்சொல்ஹெய்ம் கருத்துத்தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ம-03)

## காணாமல் ஆக்...


கொடுத்து மோசடி செய்துள்ளனர். எனவே இவற்றில் பல முரண்பாடுகள் உள்ளன.

எனவே, காணாமல் போனவர்கள் தொடர்பாக உண்மையாக அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். காணாமல் போனவர்களின் விவகாரங்களைக் கையாள்வதற்கு காணாமல் போனவர்கள் பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றின் ஊடாக நாம் தகவல்களைத் திரட்டி வருகிறோம்.

குறிப்பாக, உள்நாட்டுப் போரின்போது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை தொடர்பாக பலவிதமான கருத்துக்கள் உள்ளன. ஒவ்வொரு விதமான அறிக்கைகள் ஒவ்வொரு தொகையைக் கூறுகின்றன. எனவே, காணாமல் போனவர்கள் தொடர்பாக வேறுபாடுகள் இருப்பதால் ஆதாரபூர்வமான அறிக்கை ஒன்று மிகவும் அவசியமான ஒன்றாகும்.

எனவே, காணாமல்போனவர்கள் விவகாரத்தில் முதலில் தரவுகள் அடிப் படையில் உண்மையான அறிக்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றார். (ம-03,6)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## பொன்னையா இராசநாயகம்

[ முன்னாள் பணியாளர், இலங்கை பொலிஸ் மற்றும் மக்கள் வங்கியின் வடபிராந்திய தலைமைக் காரியாலயம், முழு இலங்கைக்குமான சமாதான நீதவான். ]

கடந்த 03.09.2020 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது தந்தை பொ. இராசநாயகத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.10.2020 ) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது.அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்க்கையின் மிகச் சவால் நிறைந்த தருணம் ஒன்றை எதிர்கொள்வதில் எமது குடும்பத்துக்குத் துணைநின்ற அத்தனை அன்புள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்த்தி உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது தந்தை இறைபதம் அடைந்த செய்தியை அனைவரிடமும் கொண்டு செல்வதில் உதவிய உறவினர்கள், நண்பர்கள், பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்கள், நேரில் வந்து ஆறுதல் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள பிரதிநிதிகள், நிறுவனங்களின் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாதுகாப்பு தரப்பினர் மற்றும் மாணவர்கள், கண்ணீர் அஞ்சலிகள், கவிதைகள் மற்றும் நயப் புரைகளை எழுதி பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் துண்டுப் பிரசுரங்களிலும் மற்றும் பதாதைகளிலும் வெளியிட்டோர், வாசித்தோர், உரையாற்றியோர், இறுதி ஊர்வலத்தை சிறப்புற ஏற்பாடு செய்திருந்த காந்தி சனசமூக நிலையத்தினர் மற்றும் உறவுகள், உணவு, தேனீர், குளிர்பானங்கள் வழங்கியவர்கள், 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு " இராஜதீபம்" என்ற நினைவு மலர் வெளிவருவதற்கு முதற்காரணமும் காரியமுமாக இருக்கின்ற கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தைச் சேர்ந்த திரு. என். கே. துரைசிங்கம் (பிரான்ஸ்) அவர்கள், அவருக்குத் துணைநின்ற திரு சு. நிஷாகரன் மற்றும் திரு. க. சிறீதரன் போன்ற இலக்கிய வட்ட நண்பர்கள், நினைவு நூல் வெளிவருவதில் ஆக்கங்களையும், ஊக்கத்தையும் கொடுத்து உதவிய "மண்" சஞ்சிகை ஆசிரியர் திரு. வி. சிவராசா (ஜேர்மனி) அவர்கள் மற்றும் "நினைவு நூற் குழு" ப் பிரதிநிதிகள், நினைவு மலருக்கான அஞ்சலிக் குறிப்புக்களையும், கவிதைகளையும், கட்டுரைகளையும் கொடுத்துதவிய அதிகாரிகள், உறவினர்கள், நண்பர்கள், எமது தந்தைக்கு சிகிச்சைகளை மேற்கொண்ட வைத்திய நிபுணர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்கள், எமது தந்தையின் மறைவுச் செய்தியறிந்து எங்கள் குடும்பத்தினருடன் நேரடியாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்ததுடன், வெளிநாட்டிலிருந்து வருகைதந்த சகோதரர்கள் இருவரையும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் விரைவாகச் செய்தும், உதவிய பாதுகாப்பு தலைமைப் பிரதானியும், இராணுவத் தளபதியும் கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா அவர்கள் மற்றும் அவரது அணியினர், இறுதி நிகழ்வில் கொவிட் - 19 பாதுகாப்பு நடை முறைகள் பின்பற்றப் படுவதற்காக சகல வசதிகளையும் மேற்பார்வைகளையும் வழங்கி உதவிய யாழ். மாநகர சபை மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அணியினர் அத்துடன் சாவகச்சேரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அணியினர் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

**15 / 11C, முதலாம் ஒழுங்கை, கண்டி வீதி, அரியாலை.** (4356) **குடும்பத்தினர்.**

# பசில் மட்டுமல்ல புலிகளும் வருவர் "20" குறித்து தாரக நாணயக்கார

(கொழும்பு)

**20 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரட்டைக் குடியுரிமை விவகாரத்தைப் பயன்படுத்தி பசில் ராஜபக்ஷ மாத்திரமல்ல, சுவிட்சர்லாந்திலுள்ள இலங்கை குடியுரிமையைக் கொண்ட புலம்பெயர் புலிகள் கூட பாராளுமன்றத்திற்கு செல்லக்கூடிய அபாயம் உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் அபராதுவ தொகுதியின் அமைப்பாளர் சட்டத்தரணி தாரக நாணயக்கார தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

19 ஆவது திருத்தத்தின் மூலம் குறைக்கப்பட்ட ஜனாதிபதிக்குரிய நிறைவேற்றதிகாரங்கள் 20 இன் மூலம் மீண்டும் கொண்டுவரப்படவுள்ளன. இது பாராளுமன்றத்திற்கும் ஜனநாயகத்திற்கும் பாரிய பாதகமாகும். தனிநபர் கைகளில் முழுநாட்டையும் ஒப்படைக்கின்ற சர்வாதிகார ஆட்சிக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் பாராளுமன்றம் செல்லலாம் என்ற ஏற்பாடு 20 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்திற்குள் அனுமதிப்பதற்கான மறைமுக முயற்சியாகும். எனினும் இவ்வாறான ஏற்பாடு காணப்படுவதால் பசில் ராஜபக்ஷ மாத்திரமல்ல, சுவிட்சர்லாந்தில் வாழும் இலங்கை குடியுரிமையைக்கொண்ட புலம்பெயர் புலிகள் கூட பாராளுமன்றத்திற்கு தெரிவாகலாம் என்பதை நினைவுபடுத்துகின்றோம். இவ்வாறு இடம்பெற்றால் அது நாட்டின் இறையாண்மையை பாதிக்கும்.

எவ்வாறிருப்பினும் அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும் 20 ஐ நிறைவேற்றிக் கொள்ள முடியுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆளுந்தரப்பிலுள்ள சந்திம வீரக்கொடி போன்ற சிலரது கருத்துக்களும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மௌனமும் அரசாங்கத்தை இவ்வாறு சந்தேகம் கொள்ள வைத்திருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (நி)



## கடலரிப்பைத்தடுக்க தடுப்பணை கோரி கொக்குப்படையான் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குப்படையான் மீனவக் கிராமம் கடலரிப்பினால் மூழ்கும் நிலையில் உள்ளது.

எனவே கடலரிப்புத் தடுப்பு அணை அமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி குறித்த கிராம மக்கள் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொக்குப் படையான் மீனவக் கிராமங்கள் வேகமாக கடலரிப்பிற்கு உள்ளாகி வருகின்றது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமது வாழ்வாதாரத்தை மீட்டுத் தருமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கொக்குப்படையான் கிராம மக்களாகிய நாங்கள் கடற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறோம்.

இப்பகுதி மக்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ள நிலையில் மிகவும் அவசரமாக இந்தக்கவனயீர்ப்புப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

இதனை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனமெடுத்து கடலரிப்பு ஏற்படும் பகுதிகளுக்குத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (5-4-285)

## ஹன்டர்-ஆட்டோ விபத்து

### பெண் ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஹன்டர் - ஆட்டோ விபத்தில் ஆட்டோ சேதமடைந்ததுடன் அதில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதிக்கு குறுக்கே வர ஹன்டர் வாகனச் சாரதி சடுதியாக வாகனத்தை நிறுத்திய போது பின்னால் வந்த ஆட்டோ ஹன்டர் வாகனத்தின் பின்புறமாக மோதி இவ்விபத்து சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட வேலங்குளம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பூவரசங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுக் காலை வேலங்குளத்தில் உள்ள அவரது வீட்டினை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 775 மில்லிகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. (5-4-299)

## இந்தியாவை நம்பியே தமிழர்கள்

### சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழர்களின் இருப்பையும் பாதுகாப்பையும் இந்தியா தான் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

மறைந்த பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"மறைந்த பாடகர் தமிழ் மக்களினுடைய உணர்வுகளோடு பயணித்த ஒருவர். அதற்காக பல பாடல்களை எங்கள் இனம் சார்ந்து எங்கள் தேசம் சார்ந்து பாடி இருக்கின்றார் என்று குறிப்பிட்ட அவர் எங்களுடைய பாதுகாப்பையும் எங்களது வாழ்வையும் இருப்பையும் இந்தியா தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு எங்களை உங்களிடம் ஒப்படைத்து காத்திருக்கின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் இலங்கை அரசின் சர்வாதிகாரப் போக்கும் இப்போதுள்ள 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அதனால் இலங்கையில் நடைபெறப்போகும் பல காரியங்களும் எங்களை தாண்டி ஏதோ செய்யப் போகின்றது என்ற அச்சமும் எங்களிடம் இருக்கின்றது. எனவே எம்மைப் பாதுகாக்கின்ற பொறுப்பும் இந்தியாவிடம்ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது" எனவும் தெரிவித்தார்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் குருகுலராஜா மற்றும் கலைப் படைப்பாளிகள், கலைஞர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு மறைந்த பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கு அஞ்சலி செலுத்தியதுடன் தமது இரங்கல் செய்தியினையும் துணைத்தூதுவர் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர். (5-4)

## நாமலை ஜனாதிபதியாக்கும் நாடகத்திற்கான மேடையே 20 ஆவது திருத்தம்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த திட்டங்கள் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவை அடுத்து ஜனாதிபதியாக்கும் நாடகத்துக்கான ஒரு மேடை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாகச் செயற்படும் எனவும் 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒருமித்து முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார். அரசாங்கம் எதைச் செய்தாலும் பாராளுமன்றத்தில் ஒருமித்த கருத்தை அறிந்துகொள்ள வேண்டும். தாங்கள் விரும்பியதைச் செய்ய முயற்சிக்கக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# இராணுவ தினத்தை முன்னிட்டு பிரித் பாராயண நிகழ்வு

(கொழும்பு)

இராணுவ தினத்தை (ஒக்டோபர்- 10) தினத்தை முன்னிட்டு இராணுவ பௌத்த சங்கத்தினால் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்படும் பௌத்த மத வழிபாடான முழு இரவும் பிரித் பாராயணம் செய்யும் நிகழ்வானது நேற்று முன்தினம் இராணுவ தலைமையக வளாகத்தில் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இதன் ஒரு அங்கமாக 71 தேரர்களுக்கு நேற்றுக்காலை அன்னதானம் மற்றும் மதிய தானமும் வழங்கப்பட்டது.

இராணுவத்தின் சகல நிலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1,000 க்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். மேற்கு பாதுகாப்பு படைத் தளபதியும் இராணுவ பௌத்த சங்கத் தலைவருமான மேஜர் ஜெனரல் சூலா அபேநாயக்க மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் படையினர் இப்புண்ணிய கருமத்தில் பங்கேற்றனர். (ஐ-4)

# பாராளுமன்றம் கூடும் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

நிதி திருத்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பு மற்றும் இறக்குமதி.ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விதிமுறைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி, பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 7 ஆம் திகதி, தேசிய கட்டடத் திருத்த வரி மசோதாவின் இரண்டாவது வாசிப்பு, பொருளாதார சேவை கட்டண திருத்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பு மற்றும் துறைமுகங்கள், விமான நிலைய திருத்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பு ஆகியன விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளன.

அத்துடன், வெளிநாட்டு ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒத்தி வைப்பு விவாதங்கள் இடம்பெறும் எனவும் பாராளுமன்ற தகவல் தொடர்புப் பிரிவு தெரிவித்தது.

எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை அடுத்த பாராளுமன்ற கூட்டத்தொடரை கூட்டுவதற்கு பாராளுமன்ற செயற்குழு கூட்டத்தில் நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எதிர்க்கட்சியினர் அரசு மீது வீண்பழி சுமத்துகின்றனர்

## ரோஹித அபேகுணவர்த்தன



(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் நன்று அறிவார்கள் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டு மக்கள் தங்களின் பெறுமதியான வாக்குரிமையூடாக சிறந்த ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்துள்ளனர்.

நாட்டின் எதிர்காலம் தொடாபில் சிந்தித்து பொதுமக்கள் தற்போதைய ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளனர்.

எதிர்க்கட்சியினரால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முடியாது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

அதனாலேயே அரசாங்கம் மீது வீண் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். எதிர்க் கட்சி தலைவர் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தியவர்கள் அரச தரப்புடன் உள்ளவர்கள் என கூறுகின்றனர். அது தவறான கருத்தாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# மழையுடனான காலநிலை தொடரும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது.

அதேபோன்று, வடமேல் மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.



நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோண மலை மற்றும் அம்பாந் தோட்டை மாவட்டங்களி லும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தி யாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வானிலை மற்றும் கடல் நிலையில் சற்று மாற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மைத்திரியிடம் சொல்லாதது தவறே

## மனம் வருந்தும் ஹேமசிறி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே அறியக்கிடைத்தும் அது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவிக்காமல் தான் செய்த தவறினை நினைத்து மனவருத்தம் அடைவதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் அரச புலனாய்வு பிரிவினரின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவிற்கும் இடையில் சுமுகமான உறவு காணப்பட்டமையே தான் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை என அவர் சாட்சியமளித்துள்ளார். (ஐ-4)

# இரு நாட்டு கடல் சார் பாதுகாப்பு குறித்து ஜப்பான் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

இந்திய சமுத்திர பிராந்தியத்தில், வர்த்தக மற்றும் கடல் மையமாக தன்னை நிலைநிறுத்துவதற்கான இலங்கையின் நோக்கத்தை அடைவதற்கு தரமான உட்கட்டமைப்பு மேம்பாடு அவசியம்.இதனை உறுதி செய்யுமாறு ஜப்பானிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பிரச்சினைகள் குறித்த நான்காவது, இலங்கை - ஜப்பான் உரையாடல் அண்மையில் நடைபெற்றதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. .

இது தொடர்பான காணொளிச் சந்திப்பின் போது, ஜப்பானிய தூதுக் குழுவில் வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், ஜப்பான் கடலோர காவல்படை மற்றும் கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கை தூதுக்குழுவில் வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சகம், பாதுகாப்புப் பணியாளர்கள், கடற்படை, வான்படை, கடலோர காவல்படை, இலங்கை துறைமுக ஆணையம் மற்றும் வணிகக் கப்பல் செயலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

உரையாடலின் போது, இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பரவியுள்ள பலதரப்பு கடல் சார் முயற்சிகள் குறித்து தீவிர விவாதங்கள் நடத்தப்பட்டன.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு களங்களில் ஒத்துழைப்பின் முன் னேற்றத்தை இலங்கை வரவேற்றதுடன், கடல்சார் குற்றங்களை தடுப்பதில் இரு நாடுகளுக்கும் இடையிலான முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்த கருத்துகளையும் பரிமாறிக் கொண்டது. (ஐ-4)

# தள்ளுபடியான வழக்கு

(கொழும்பு)

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 2010 - 2014 ஆம் ஆண்டுக்கிடையில் 153 ச.தொ.ச.தொழிலாளர்களை அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியதாகவும், இதன் மூலம் அரசுக்கு 40 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாகவும் கூறியே இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கிளிநொச்சியில் நாளை விழிப்புணர்வு நடைப்பயிற்சி

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாபெரும் சமூக விழிப்புணர்வு நடைப்பயிற்சி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் ஏற்பாட்டில் உடல் ஆரோக்கியத்திற்கும் சமூக விழிப்புணர்வுக்குமான நடைப்பயிற்சி ஒன்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலிருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

நாளை காலை 6.45 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பிக்கவுள்ள குறித்த நடைப்பயிற்சி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை சென்றடையும்.

எனவே இந்த விழிப்புணர்வு நடைப்பயிற்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும், முழுமையான தூரத்தை நடந்து சென்றடைய முடியாவிட்டாலும் தங்களால் இயலுமான தூரம் நடப்பதற்கு இணைந்து கொள்ளுமாறும் கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவை கோரியுள்ளதோடு, நடைப்பயிற்சிக்கு வருகின்றவர்கள் அதற்கேற்ற உடை,காலணி, தொப்பி என்பவற்றை அணிந்து வருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (5-4-350)

# அதிபர் தகைமையுள்ளவர்களை நியமிக்குமாறு ஆளுநருக்கு கடிதம்

(பதுளை)

பதுளை மாவட்டத்தின் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றில் அதிபர்களின் பற்றாக்குறை இருந்து வருகின்றது. இப்பற்றாக்குறை இருந்து வரும் பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள அதிபர்களை நியமிக்கும்படி கோரி பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த குமார், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"தமிழ்ப் பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் அதிபர் வெற்றிடங்களுக்கு அதிபர் தகைமையற்றவர்களை நியமிப்பதன் மூலம், தமிழ் பாடசாலைகள் கல்வி தொடர்ந்தும் பெரும் பின்னடைவுகளையே எதிர்நோக்கும்.

ஆகவே இந்த விடயத்தைத் தங்களின் மேலான கவனத்திற்கு எடுத்து அதிபர் தகைமையுள்ளவர்களினால், ஏற்பட்டிருக்கும் அதிபர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

அரசின் கவனம் மாவட்ட தமிழ் பாடசாலைகள் விடயத்தில் இல்லாத நிலை தென்படுகின்றது. அவற்றினை நிவர்த்தி செய்து, பாடசாலைகளின் அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்நிலையில், அதிபர் நியமனங்களையும் முறையாக மேற்கொள்ளாதவிடத்து மாகாண தமிழ்க்கல்வி மேலும் பாரிய பின்னடைவை எதிர்கொள்ளும். இதனால் பாதிக்கப்படுபவர்கள் மாணவ, மாணவிகளே யாவர்.

ஆகவே, இது குறித்து தங்களின் மேலான கவனம் செலுத்தப்பட்டு, அதிபர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் விடயங்களில் அதிபர் தகைமையுள்ளவர்களை நியமிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# பகிரங்க ஏலவிற்பனை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமைகோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், சவள்கள், தண்ணீர் மோட்டர், கையடக்கத் தொலைபேசி ஆகிய பொருட்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

பகிரங்க ஏலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்து ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் பொருட்களை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# பத்து இலட்சம் பெறுமதியான முதிரைக்குற்றிகளுடன் ஒருவர் கைது




(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலமோட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச்செல்லப்பட்ட முதிரைமரக்குற்றிகளை புளியங்குளம் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

பாலமோட்டை பகுதியில் முதிரைமரங்கள் கடத்தப்படவுள்ளதாக விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அதிகாலை குறித்த பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் லொறி ஒன்றை வழிமறித்து சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது உமி மூடைகளால் மறைத்து வைக்கப்பட்டு கடத்தி செல்லப்பட்ட பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான 23 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றை கடத்தி செல்லப் பயன்பட்ட வாகனத்தை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதுடன் நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

குறித்த மரக்குற்றிகள் யாழ். நோக்கி கடத்திச் செல்லப்படவிருந்ததாக தெரிவித்த விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றப்பட்ட முதிரைக்குற்றிகளையும் கைது செய்யப்பட்ட நபரையும் நீதிமன்ற நடவடிக்கைகளிற்காக ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (5-4-299)





கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வுகள்.





யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளின் 151 ஆவது ஜனன தினம் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தி அடிகளின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து அனுஷ்டிக்கப்பட்டது.

# யாழ்.மாவட்டத்தில் 15 வீதமானோருக்கு நீரிழிவு நோய்

## எமது வாழ்க்கை முறையை மாற்றாவிடின் விளைவு விபரீதமாகும்

## நீரிழிவு சிறப்பு வைத்திய நிபுணர் அரவிந்தன்



(குப்பிழான்)

**யாழ்.மாவட்டத்தில் ஏறக்குறைய 15 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் காணப்படுகிறது. முன்னைய காலத்தில் வயது முதிர்ந்தவர்களுக்கு வருகின்ற இந்த நீரிழிவு நோய் இன்றைய காலத்தில் இளம் சமுதாயத்தினருக்கும் ஏற்படுகின்றது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிறப்பு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் சிவமகாலிங்கம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.**

முதியோரைக் கௌரவித்தலும் புற்றுநோயாளர்களிற்கு உதவி வழங்கலுக்காக நிலையான வைப்புக்குரிய நிதி திரட்டலுக்கான பெருவிழாவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வாழ்க்கை நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழக்கங்கள், அப்பியாசமற்ற வாழ்க்கை முறை, மன அழுத்தங்கள் போன்றவையே நீரிழிவுத் தாக்கத்திற்கு வழிகோலும் காரணிகளாகும்.

ஆரோக்கியமான வாழ்வு என்றால் உடல் ஆரோக்கியம் மாத்திரம்தான் எனப் பலர் நினைப்பார்கள். ஆனால், ஆரோக்கியமென்பது உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியம் ஆகிய அனைத்தும் இணைகின்ற போது தான் ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ்கின்றான் என எம்மால் கூற முடியும். தற்போது இளம் சமுதாயத்தினரில் பலரும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக நீரிழிவு நோயைக் குறிப்பிட முடியும். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 60 சிறுவர்கள் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்று வருகின்றனர். அந்தச் சிறுவர்களுக்குத் தேவையான இன்சுலின் மருந்து வைத்தியசாலையில் கிடைப்பதில்லை. நாங்கள் பல நன்கொடைகள் மூலம் பெற்றுக் கொள்கிறோம்.

இன்றைய காலத்தில் மனம் விட்டுப் பேசுவதற்கு எவருமில்லாத வாழ்க்கையை நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எத்தனையோ பேர் தங்களுக்கு முகநூலில் ஐயாயிரம் நண்பர்களிருக்கிறார்கள் எனக் கூறுவர். ஆனால், அவர்களுடைய நிஜ வாழ்க்கையில் நண்பர்களைத் தேடுவது மிக அரிதாகவுள்ளது. இவ்வாறான போலி உலகில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதுவும் தொற்றா நோய்களின் பாதிப்பு ஏற்படுவதற்கு மிக முக்கியமான காரணியாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (5-4-18)




(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் துன்னாலை முனியப்பர் கோவில் பகுதியில் 10 கிராம் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.(5-4-60)

++++++++++++++++++++++

(கரணவாய்)

துன்னாலை முனியப்பர் கோயிலை அண்டிய பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(5-4-60)

## கிழவன்காடு கலாமன்றத்தின் பரிசளிப்பும் கலை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலை நிகழ்வும் நாளை 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும்.

காரைநகர் கிழவன் காடு கலாமன்ற ஸ்தாபகரும் தலைவருமான ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில் நந்தனன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக, யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன், யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்தரக்கிளை பிரதான முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கலாமன்ற உறுப்பினர் கலை மாடக்கோன் சிவஞானம் உமாதேவி தம்பதியினரும் கலந்துகொள்வர்.

துறைசார் விருந்தினர்களாக நாதஸ்வர வித்துவான் சங்கீத நாதசாகரம் ஆ.கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி. சுகன்யா அரவிந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்வசத்தை முன்னிட்டு நாளை மறுதினம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அபிஷேகம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 5.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் விநாயகப் பெருமான் வீதியுலாவும் இடம்பெறும். (5)

## வீதிகளுக்கு பெயரிட நகர சபை தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினர் வீதிகளுக்கு பெயரிடல் மற்றும் பெயர்ப்பலகை பொருத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் போது வட்டாரத்தில் உள்ள புத்திஜீவிகளின் ஆலோசனைகளைப் பெற்று அதனை மேற்கொள்ள வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை முதற்கட்டமாக ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்தும் பத்து வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்தத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் பெயரிடப்படாத நிலையில் காணப்படும் வீதிகளுக்கும் பெயரிட உத்தேசித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை நகரசபை முன்னெடுக்கும் போது அந்தந்த வட்டாரங்களில் உள்ள புத்திஜீவிகளின் ஆலோசனைகளையும் பெற வேண்டும். சில வீதிகளுக்கான பெயர்களில் மாற்றங்கள் நிலவுகின்றன. நகரசபையின் பதிவில் ஓர் பெயர் காணப்படும் அதேவேளையில் மக்கள் பயன்படுத்தும் பெயர் வேறாகக் காணப்படுகிறது.

எனவே இக்குழப்பத்தை நீக்க வட்டாரத்தில் உள்ளவர்களின் ஆலோசனைகள்தேவை. அலுவலகத்தில் இருந்துகொண்டு இவ்வாறான பணிகளை மேற்கொண்டால் மீண்டும் தவறுகள் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

## சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும்மொழிக் கற்கைநிலையத்தில்கடந்த 2014/2015, 2015/2016, 2016/2017, 2017/2018 ஆகிய கல்வி ஆண்டுகளில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் அடிப்படை மற்றும் டிப்ளோமா பாடநெறியினைப் பயின்று இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாத பயிலுநர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் தங்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இதன் பின்னர் சான்றிதழ்களைப்பெற்றுக்கொள்ள முடியாது எனவும் மும்மொழிக் கற்கை நிலைய பதில் பணிப்பாளர் பி.எஸ்.சுதர்ஷன் அறிவித்துள்ளார்.(5)

# சாணக்கியன் உட்பட 6 பேரும் வழக்கிலிருந்து விடுதலை

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் இருந்து குறித்த அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திலீபனை நினைவுகூரும் முகமாக இலங்கை தமிழரசுக்கட்சி சார்பில் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்களால் விளக்கு ஏற்றும் நிகழ்வினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவித்து மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நா.சங்கரப்பிள்ளை ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொய்யான குற்றச்சாட்டுகளை வைத்து வழக்குகளை தயார் செய்தமையால் குறித்த வழக்கிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ஜ-4)

## அணைகளுக்கான பாதுகாப்பு தொடர்பில் விசேட நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய மலை நாட்டில் உள்ள மகாவலி நீர்த்தேக்க அணைகளின் நிலை மற்றும் நிலநடுக்கம் காரணமாக அவற்றில் ஏற்படும் தாக்கம் குறித்து அறிந்து கொள்ளும் வகையில் 24 மணிநேர கண்காணிப்பு அமைப்பொன்றை அமைப்பதற்கு மகாவலி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் மற்றும் பொறியியல் பீடத்தின் உதவியுடன் குறித்த அமைப்பு அமைக்கப்பட உள்ளதாக மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் செனரல் சுனில் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல மற்றும் ரந்தம்பே ஆகிய நீர்த்தேக்கங்களின் அணைகளில் அமைக்கப்படும் சென்சர்களால் குறித்த அணைகளுடன் தொடர்புடைய சிறிய அதிர்வுகளையும் பதிவு செய்ய முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், குறித்த நீர்த்தேக்கங்களின் அணைகளில் ஏற்படும் தாக்கங்களை கண்காணிப்பதற்கென ஒரு பிரத்தியேக குழு மற்றும் தனி கட்டுப்பாட்டு அறை 24 மணிநேரமும் இயங்குமெனவும் பணிப்பாளர் செனரல் சுனில் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## 263 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக இங்கிலாந்தில் சிக்கித் தவித்த 263 பேர் நேற்று பிற்பகல் நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யுஎல்-504 என்ற விமானத்தின் மூலம் இவர்கள் லண்டன், ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் பி.சி. ஆர்.சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தலுக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)

## 18 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள இரவு விடுதியொன்றில் நேற்று முன்தினம் பொலிஸார் முன்னெடுத்த சோதனையில் 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

12 பெண்களும் 6 ஆண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 03.10.2020 சனிக்கிழமை தொடக்கம் 09.10.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சி வழங்குபவர் : **துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
தொ.இல:0212222772.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: டிப்ளோமா பட்டதாரி ஆங்கில ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர்<br>தொ.இ: B/11246 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா:50செவ்7 இல் உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியை (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள மணமகன் சைவபோசனம், மாறக் கூடியவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/122 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 49 ¾ செவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.Sc, System Administrator (private)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/11248 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா:5 ½ செவ்10இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: சாதாரன தொழில் உள்ளவர் விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/163 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா:28 செவ் 10இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc. Engineer in Newzeland<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11257 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா:22¼ செவ்1 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:வெளிவாரிபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/185 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா:72 செவ் 1இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11260 | பிறப்பு: 1972 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 5¼ சூரி,செவ் 11 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்ள மணமகன்<br>தொ.இ: G/189 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# இலங்கை அரசியலமைப்பு

20 ஆவது திருத்தம்

# ஆய்வரங்கு

## அழைப்பிதழ்

காலம்
04.10.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி

இடம்
யாழ்.வீரசிங்கம் மண்டபம்

தலைமை
**திரு.சி.வி.கே.சிவஞானம்**
அவைத்தலைவர், வடக்கு மாகாணசபை

தொடக்கவுரை
**திரு.மாவை.சோ.சேனாதிராசா**
தலைவர், இ.த.அ.கட்சி

சிறப்புரை
**திருமதி கோசலை மதன்**
சட்டத்தரணி, முதுநிலை விரிவுரையாளர்,
சட்டத்துறைபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.
**"20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்"**

சட்ட உரை
**திரு.எம்.ஏ.சுமந்திரன் பா.உ.**
ஜனாதிபதி சட்டத்தரணி
***"20 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் அரசியல் விளைவுகளும்"***

(4341)

நன்றியுரை

அனைவரையும் பங்குகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி

# பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தால் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்ள முடியும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலகத்தில் பல பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக பிரதேச செயலர் திருமதி.ச.லதுமீரா தெரிவித்துள்ளார்.

குறித்த பதவி வெற்றிடங்களைப் பூத்தி செய்தால், தம்மால் கூடுதலான பணிகளை வினைத்திறனாக மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச செயலகப் பிரிவில் குறிப்பிட்ட சில பதவிகளுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக துணுக்காய் பிரதேச செயலகத்தினுடைய கணக்காளர் நிரந்தரமான கணக்காளராக இருக்கின்ற போதிலும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் பதில் கடமை மேற்கொண்டு வருகின்றார்.

அதேவேளை இங்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளராகப் பணிபுரியும் உத்தியோகத்தர் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நிரந்தர நியமனம் பெற்று எமது பிரதேச செயலகத்தில் பதில் கடமை புரிகின்றார்.

அத்தோடு மேலதிக பதிவாளர், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்குரிய வெற்றிடங்களும் காணப்படுகின்றன. அத்துடன் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

குறிப்பாக 20 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மக்களுக்கு, வெறுமனே 11 கிராம உத்தியோகத்தர்களே துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இருப்பதனால், 9 கிராம உத்தியோகத்தர்கள் பதில் கடமை புரிகின்றனர். இதனால் மிகுந்த இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

குறித்த வெற்றிடங்களை இவ்வருடத்திலாவது பூர்த்தி செய்து தருவதற் குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால், கூடுதலான செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (5-4)




# கால்நடை மேய்ச்சல் தரவைகளை அடையாளப்படுத்திய பிரதேச செயலகம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் முதற்கட்டமாக மூன்று இடங்களில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேசத்தில் கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயர்ச்செய்கை காலங்களில் பராமரிப்பதில் பெரும் சிரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது துணுக்காய் பிரதேசத்தில் உள்ள அதிகளவான மக்களின் வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்பு காணப்படுகின்ற போதும் இதுவரை அவற்றைப் பராமரிப்பதற்கான எந்தவித மேய்ச்சல் தரவைகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இவற்றுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்துத்தருமாறு பண்ணையாளர்களால் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அவற்றுக்கான இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன்குளம் பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பும் கல்விளான் பகுதியில் 600 ஏக்கர் நிலப் பரப்பும் கோட்டைகட்டியகுளம் பகுதியில் 200 ஏக்கர் நிலப் பகுதியும் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன.

எனினும் இவை வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் என்பதால் அவற்றை விடுவித்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (5-4-315)




வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத மகாவிஷ்ணு ஆலய இரதோற்சவம் நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:-சதீஸ்)

# ஏலவிற்பனை

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் இன்று 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் மணல் ஏலவிற்பனை இடம்பெறவுள்ளது. எனவே ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும் எனவும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# ஆக்கிரமிக்கப்படும் நீரேந்து பகுதிகளை அளவீடு செய்ய நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல குளங்களின் நீரேந்துப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு வீடுகள் அமைக்கப்படுவதுடன், குறித்த நீரேந்துப் பகுதிகளைச் சிலர் விவசாய நிலங்களாகப் பயன்படுத்துவதாகவும்,

இவ்வாறு குளத்தின் நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கமநல சேவைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற துணுக்காய் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குள ஒதுக்கீடுகளை ஆக்கிர மித்து நெற் பயிர்ச்செய்கை மற் றும் வீடுகள் கட்டுதல் உள்ளிட்ட செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக நமணங்குளம், அனஞ்சியன்குளம், ஆலங்குளம், குஞ்சுக்குளம் போன்ற இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

கடந்த 25 ஆம் திகதி கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் உட்பட கள விஜயத்தினை மேற்கொண்டிருந்தோம்.

குறிப்பாக நமணங்குளத்தில் ஒருவர் குளத்தின் நீரேந்தும் பகுதியில் நெற் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இதுதவிர தென்னை முதலிய பயிர்ச்செய்கைகளையும் மேற்கொண்டு, ஒரு விவசாய நிலமாக குளத்தின் நீரேந்துப் பகுதியினைப் பயன்படுத்தி வருகின்றார்.

இது தொடர்பில் அவருக்கு நாம் அறுவுறுத்தியபோதிலும் அவர் அதனைக் கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில் நாம் நில அளவைத் திணைக்களத்தினூடாக எல்லைப்படுத்தித் தருமாறு பிரதேச செயலாளரைக் கோரியிருக்கின்றோம். எல்லைப்படுத்திய பின்னர் அதற் குரிய சட்ட நடவடிக் கையினை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4)

# வீதி போக்குவரத்துக்கு முற்றாக தடை வீதி அபிவிருத்தி அதிகார சபை

(அக்கராயன்)

கிளிநொச்சி பரந்தன் பூநகரி வீதியூடான போக்குவரத்து இன்று 3 ஆம் திகதி முதல் தொடர்ந்து மூன்று நாளுக்கு முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என கிளி நொச்சி வீதி அபிவிருத்தி அதி கார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.எம்.மொறாய்ஸ் தெரிவித்துள்ளார்.

பரந்தன் பூநகரி வீதியில் பரந்தனிலிருந்து 12 ஆவது கிலோ மீற்றருக்கு அண்மையாக உள்ள 11/5 இலக்க இரும்பு பாலம் ஒன்றில் ஏற்பட்ட பாரிய பழுதினை திருத்தும் பணிகள் இடம்பெறுவதால் இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் (சனி ஞாயிறு, திங்கள் ) ஆகிய மூன்று நாட்களும் அப்பாதையின் ஊடான அனைத்து போக்குவர த்துகளும் முற்றாக தடை செய் யப்பட்டுள்ளன.

எனவே பொது மக்கள் மாற்று பாதைகளை பயன்படுத்துமாறும் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் திருத்தப் பணிகள் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு இடம்பெறும் எனவும் இக்காலப்பகுதியில் துவிச் சக்கர வண்டி உள்ளிட்ட எந்த வாகனங்களும் குறித்த வீதியினை பயன்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (5-4-100-350)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 182 பேர் சொந்த இடங்களுக்கு

(நெளுக்குளம்)

கொவிட்-19 நோய்த்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் தங்கியிருந்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்படுகிறது

அந்தவகையில் ஜோர்தானிலிருந்து அழைத்துவரப்பட்ட 182 பயணிகள் வவுனியா வேலங்குளம் விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 182 பேர் நேற்று அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக் கப்பட்டனர்.

குறித்த பயணிகளிற்கான பி.சி.ஆர்.பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தத்துடன், கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்



னரே அவர்கள் தமது சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் வேலங்குளம் விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து கடந்த நான்கு மாதங்களில் 1102 பேருக்கு மேற்பட்டோர் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

## இராசிபலன்

3.10.2020
புரட்டாதி 17, சனிக்கிழமை
துதியை முழுவதும்
ரேவதி முற்பகல் 9.31 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சந்திராஷ்டமம் அத்தம்
3 வது புரட்டாதிச் சனி

வளவன்


மேஷம்

எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள்.


மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழிலில் உயர்ந்த நிலையடைய சந்தர்ப்பங்கள் கூடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும்.


கன்னி

வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


துலாம்

எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


விருச்சிகம்

திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நெடு நாளைய கனவுகள் நனவாகலாம்.


மகரம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு.


கும்பம்

பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.


மீனம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

உன்னையே நீ நம்பாதவரை யாரையும் நீ நம்பப் போவதில்லை.

# நாட்டில் டெங்கு ஆபத்து அதிகரிக்கும்


### சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

**கொரோனா அச்சுறுத்தலை தொடர்ந்து நாட்டில் தொடர்ச்சியாக நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு ஆபத்து அதிகரிக்கும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் இயக்குநர் அனுரா ஜெய சேகர எச்சரித்தார்.**

டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "டெங்கு பரவுவதற்கான நிலைமை ஆபத்தானது அல்ல என்றாலும் வரும் நாட்களில் மழையுடனான காலநிலை தீவிரமடைந்து வரவுள்ளதால்


டெங்கு ஆபத்து அதிகரிக்கும்.

எனவே மக்கள், தங்களை சுற்றியுள்ள சூழலை சுத்தமாக எந்நேரமும் வைத்திருக்க வேண்டும். மற்றும் டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் வகையில் காணப்படும் பகுதிகளை அடிக்கடி சுத்தம் செய்து அவதானமாக இருக்க வேண்டும் என எச்சரித்தார். (ஜ-4)

# மொனராகலையில் காட்டுத்தீ!



(மொனராகலை)

வெல்லவாய பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட யலபோவ மலை பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் கிட்டத்தட்ட 100 ஏக்கர் பரப்பளவு வனப்பகுதி முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட தீ, அந்த பகுதி முழுவதும் வேகமாக பரவியது. இதனால் அந்த பகுதியில் உள்ள பல பழங்கால தாவரங்களும் விலங்குகளும் அழிக்கப்பட்டன.

நிலவும் வறண்ட வானிலை மற்றும் இப்பகுதியில் நிலவும் பலத்த காற்று காரணமாக, தீ அணைக்கும் முயற்சியில் சிரமம் ஏற்பட்டது.

மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவும் கும்பக்கனவில் உள்ள படை வீரர்கள் குழு தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (நி)

# அரச உற்பத்தி நிறுவனங்களினது விற்பனை நிலையங்கள் ஒரே இடத்தில்

(கொழும்பு)

அனைத்து அரச உற்பத்தி நிறுவனங்களினதும், விற்பனை நிலையங்களை ஒரே இடத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அனைத்து அரச உற்பத்தி நிறுவனங்களினதும், பொருட்களை ஒரே இடத்தில் பொதுமக்கள் கொள்வனவு செய்யும் வகையிலேயே குறித்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் முதல் மையம் நாரஹேன்பிட்டி பொருளாதார மையத்தில் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—215

# விவசாய செய்கையில் உள்ளீடுகளின் உற்பத்தியில் மாற்றம் வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

தற்போது பரவலாக மழை வீழத் தொடங்கியிருக்கின்றது. சகுனம் நன்றாகவே இருக்கின்றதென விவசாயப் பெருமக்கள் திருப்தியடைந்தாலும் இம்மழை எவ்வாறு தொடரப்போகின்றது என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஒக்டோபர் மாதம் மழை ஆரம்பிக்கும் காலம் என்பதனால் காலபோகத்திற்கான தயார்படுத்தல்கள் ஏலவே செய்து முடித்து விட்டு மழையின் முழுமையாக பங்களி

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

228

ப்பை எதிர்பார்த்து காத்திருக்கின்றார்கள். புழுதி விதைப்பு இம்முறை சரியான காலத்தில் நடந்தேறியிருக்கின்றது.

பல இடங்களில் உழுது மறுத்து விட்டு மழையை நம்பியிருக்கின்றார்கள். தேவையான உள்ளீடுகளை தேடி வாங்கிவிட்டு அவற்றை விளைநிலத்தில் விதைப்பதற்கும் தயாராகிக்கொண்டிருக்கும் போது மழையும் ஆங்காங்கே பரவலாக பெய்திருக்கின்றது.

தேவையான நீர் இம்முறை மழைமூலம் கிடைத்தாலன்றி இம்முறை காலபோகத்துக்கான நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யமுடியாது. மழைநீரை முழுக்க முழுக்க பயன்படுத்தி செய்யும் விவசாய செய்கை என்பதனால் இங்கே தரமான உள்ளீடுகள் அவசியமானதாகின்றன. அவ்வாறாயின் தரமான உள்ளீடுகளை பெறுவதும் விவசாயப்பெருமக்களுக்கு அதனை பகிர்ந்தளிப்பதும் தேவையாகின்றது.

தரமான உள்ளீடுகளில் தரமான விதைகள், பசளைகள் என்பன அடங்குகின்றன. இவற்றை தூய்மையானதாக, தரமானதாக பெறுகின்றதற்கு வழிவகைகளை இனங்காண வேண்டும்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த கமத்தொழில் அமைச்சர் தரமான விதைகள் மற்றும் நாற்றுக்களை விவசாயப் பெருமக்கள் பெறுவதற்கு கலந்துரையாடலையும் மேற்கொண்டிருந்தார்.

அவ்வாறாயின் அந்தந்தப் பிரதேசத்தில் விளைநிலங்களை ஒருங்கிணைத்து மக்களாகவே விதையுற்பத்தியை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கலாம். இதற்கான காரணங்களுமுண்டு.

தற்போதைய நிலையில் கொரோனா வைரஸினுடைய தாக்கம் இலங்கையில் எமது பிரதேசத்தில் அதிகளவில் இல்லையென்றாலும் அதனது தாக்கத்தை நாம் கவனயீனமாகக் கொள்ளக்கூடாது. அலட்சியம் செய்யவும் கூடாது. வளர்ந்த நாடுகளே இவ்வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது திக்குமுக்காடும் நிலையில் நாம் எமக்கு தரப்படும் சுகாதார அறிவுறுத்தல்களை செவிமடுத்து அதன்படி நடந்து கொள்வது நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ளும் தந்திரமாகும்.

அதற்கும் மேலாக நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் பொறிமுறையொன்றை வகுக்கலாம். வருடம் பூராகவும் விவசாயஞ் செய்வதற்கான காலம் அனுகூலமாக வரும் போது அவ்வேளைகளில் விவசாய பெருமக்கள் உற்பத்திப் பொருட்களுக்காக அங்கலாய்ப்பதனை காணலாம்.

அவ்வாறில்லாமல் ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது கிராமங்களை ஒன்றிணைத்து விதையுற்பத்தியில் ஈடுபடுவதற்கென விவசாயிகளை இனங்கண்டு அவர்களுக்கான தேவையான பயிற்சிகள், விதையுற்பத்திக்கான ஆரம்ப விதைகள், அதனை சிறப்பாக செய்வதற்கான தொழில்நுட்பம் இவற்றுடன் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் தேவையான தொழில்நுட்ப பொறிமுறைகள் என்பனவற்றை வழங்க வேண்டும்.

இதற்கான வழிவகைகளை இனங்கண்டு விவசாயப்பெருமக்களை சிறப்பு உற்பத்தியாளராக விதை, நாற்று மற்றும் நடுகைப்பொருட்களின் உற்பத்தியாளர்களாக மாற்றினால் எமக்கு தேவையான உள்ளீடுகளை பெற்றுக்கொள்வதில் சிரமமிருக்காது.

தற்போது மொபைல்தொழில்நுட்பம் பரவலாக பயன்பாட்டில் இருப்பதும் அதனை இன்னும் உள்வாங்குவதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான அவசியமான செய்திகளை வழங்கும் மொபைல் தொழில்நுட்பமாக மாறினால் இன்னும் அவர்களது உற்பத்தியை மேன்மைப்படுத்த முடியும்.

விவசாயச் செய்கையில் புதுவித தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். விவசாய செய்கைகளுக்கான வேலையாட்கள் என்பது தற்போது பிரச்சினையாகவே உருவாகியிருக்கின்றது.

பலர் வேலையற்று இருக்கின்றபோதும் திறமையான வேலையாட்களை கண்டுபிடிப்பதே சவாலாக இருக்கின்றது என்றார் பழுத்த விவசாயி ஒருவர்.

அறுவடை மட்டுமல்ல அதனைக் களஞ்சியப்படுத்தல், பொதி செய்தல், சேமித்து பாதுகாத்தல் என்பன தற்போது பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கின்றது. இவற்றுக்கான சூழலுக்கிணைவான தொழில்நுட்பங்கள் எமது விவசாயச் செய்கைக்கு கிடைக்கப்பெறுமாயின் விவசாய செய்கையும் அதனுடனிணைந்த தரமான உற்பத்தியும் அதிகரிக்கும்.

எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் உற்பத்தியில் சந்திக்கப்போகும் சவால்களை எதிர்கொள்வதற்கு விவசாயம் சார்ந்த அமைப்புக்கள் அனைத்தும் தயாராக வேண்டும்.



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை நாம் நிர்ணயம் செய்வதற்கு வினைத்திறனான பொறிமுறையை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கிராமத்து இளைஞர்களை விவசாய செய்கையில் தொடர்ந்தும் ஈடுபட வைக்கும் வழிவகைகளை அவர்களுக்கான தொழில்நுட்ப அறிவை வழங்கி மெருகேற்றலாம். இதே வேளையில் விவசாயஞ்சார்ந்த திணைக்களங்களில் உள்ள ஆளணியினை முழுமைப்படுத்த வேண்டியதும் அந்த ஆளணியைத் திறம்பட இயங்க வைப்பதற்கான பொறிமுறையும் செயலூக்கம் பெறவேண்டும்.

பல விவசாயம் சார்ந்த திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்கள் விரைந்து நிரப்பப்படல் அவசியமானதாகும். இவ்வாறான ஆளணியை பயன்படுத்தி விவசாய செய்கையை மேலும் விருத்தியடைய வைப்பதற்கான வழிவகைகளை திட்டமிடலில் உள்வாங்க வேண்டும்.

குறிப்பாக விவசாய போதனாசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும். விவசாய பட்டப்படிப்பு கற்கைகளை முடித்து வெளியேறியவர்களை விவசாயம் சார்ந்த தொழிற்றுறைக்குள் உள்ளீர்ப்பது அவசியமானதாகும்.

இவர்களுக்கு தேவையான உள்ளக பயிற்சிகளை வழங்கி அவர்களை இந்நாட்டின் உற்பத்தியில் பங்காளர்களாக மாற்ற வேண்டியதும் அவசியமானதாகும்.

இவற்றுடன் சேர்ந்து கமத்தொழில் அமைச்சு, விவசாய பீடங்கள், விவசாய கல்லூரிகள், நீர்வள அமைச்சு, சுதேச வைத்தியத்துறை மற்றும் சுற்றாடல் அமைச்சுக்களுடன் சுற்றுலாத்துறையும் இணைந்தால் உற்பத்தியை பாரம்பரிய உணவாக அனைவருக்கும் நல்வாழ்வு தரும் வகையில் ஏற்படுத்த முடியும்.

சிறுவர்கள் தினத்தில் அனைத்து பாடசாலை சிறார்களுக்கும் கஞ்சி வழங்குவதான அறிவிப்பு இளையவர்களை சுகதேகிகளாக வளர்ப்பதற்கு வித்திடும்.

எமது எதிர்கால சந்ததி வளமானவர்களாக, நோயெதிர்ப்பு சக்தியுடையவர்களாக உருவாவதற்கு அடித்தளமிடும்.

உலகளாவிய ரீதியில் காணப்படும் தொழில்நுட்பங்களை சூழலுக்கிணைவானவற்றை இனங்கண்டு எமது விவசாய பெருமக்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களை சிறந்த முறையில் உற்பத்தியை செய்வதற்கு ஊக்கமும் கொடுத்தால் அனைவருக்கும் தேவையான உணவு சத்தான உணவாக நிறையுணவாக கிடைக்க வழிபிறக்கும்.

# அனைத்து மாகாணங்களிலும் சிறுவர்களுக்கான வைத்தியசாலைகள்

## நாளைய தலைவர்களை பாதுகாப்பது எம் பொறுப்பு என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

**நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் சிறுவர்களுக்கான வைத்தியசாலைகள் அமைக்கப்பட வேண்டுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**







சர்வதேச சிறுவர் தினம் மற்றும் லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் 125 ஆவது ஆண்டு விழா என்பவற்றை முன்னிட்டு தீவிர சிகிச்சை மற்றும் அறுவைச்சிகிச்சை நிலையம் என்பவற்றை உள்ளடக்கிய ஒன்பது மாடி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கண்டி மாவட்டத்திற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் வைத்தியசாலைகள், எதிர்காலத்தில் மாகாணத்திற்கு ஒரு வைத்தியசாலை என்ற ரீதியில் அபிவிருத்தி செய்யப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், குழந்தைகள் தான் எதிர்காலத்தில் எமது நாட்டைப் பொறுப்பேற்கவுள்ள தலைவர்கள் எனவும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது எமது பொறுப்பாகுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ)

## சைபர் இணைய ஊடுருவலால் நானும் பாதிக்கப்பட்டேன் - நாமல்

(கொழும்பு)

சைபர் இணைய ஊடுருவல் தாக்குதலுக்கு நானும் அகப்பட்டேன் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அதில் குறிப்பிட்டுள்ளதாவது, சைபர் மிரட்டல் மிகவும் கடுமையான குற்றம்.

அதனை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்ள வேண்டும்.

சைபர் இணைய ஊடுருவலில் அனைவரும் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

இந்த இணைய ஊடுருவலில் நான் பாதிக்கப்பட்டுள்ளேன்.

எனவே தான் அதன் தாக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)


## ஷானியின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஷானி அபேசேரவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

பம்பலப்பிட்டி கோஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெலிவேரிய பகுதி ஆயுத கிடங்கு விவகார விசாரணைகளில், சந்தேக நபர்களைக் கைது செய்ய புதிதாக சாட்சியங்களை உருவாக்கியதாக குற்றச்சாட்டின் கீழ் இவர் கடந்த ஜூலை மாதம் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டும் மக்கள்

## ஊக்குவிப்பை வழங்கவுள்ள அரசாங்கம்

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான தொழில் முயற்சியாளர்களின் ஜீவனோபாயமாக கால்நடை வளர்ப்பே காணப்படுவதால் அரசாங்கம் ஊக்குவிப்பு மற்றும் திட்டங்களை வகுத்து உற்பத்திகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை ஒரு விவசாய நாடு என்ற ரீதியில் கால்நடைகளுக்கு பெரும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

இந்த நிலையில், போதிய நிலவளம் நாட்டில் காணப்படுவதாலும், காலநிலை மாற்றங்கள் கால்நடைகளுக்கு ஒத்துப்போகும் நிலை நாட்டில் காணப்படுவதாலும் கால்நடை வளர்ப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த கால்நடை வளர்ப்பிலே மந்தை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவை பிரதானமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இதிலிருந்து, மந்தைகளை பொறுத்தமட்டில் பசும்பால், மற்றும் எருமைப்பால் என்ற ரீதியில் பால் உற்பத்திகள் பெறப்படுகின்றன.

அடுத்ததாக கோழி வளர்ப்பிலே இறைச்சி மற்றும் முட்டைகள் என்பன விற்பனை பொருட்களாக காணப்படுகின்றன.

இந்த கால்நடை வளர்ப்பு மற்றும் அதுசார்ந்த உற்பத்திகளில் கடந்த இரண்டு வருடங்களில் வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக 2018 ஆண்டு 1.1 மில்லியன் கறவைப் பசுக்களும், 0.3 மில்லியன் எருமைகளும் காணப்பட்டுள்ளன.

இதன்படி, 391.5 மில்லியன் லீற்றர்கள் கறவை பசுப்பாலும், 85.9 மில்லியன் லீற்றர்கள் எருமைப்பாலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2018 ஆம் ஆண்டு ஆயிரத்து 972.2 மில்லியன் கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 214.2 மெற்றிக் தொன் கோழி இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, 2019 ஆம் ஆண்டு 1.1 மில்லியன் கறவைப் பசுக்களும், 0.3 மில்லியன் எருமைகளும் காணப்பட்டுள்ளன. இதன்படி, 374 மில்லியன் லீற்றர்கள் கறவைப் பசுப்பாலும், 73.6 மில்லியன் லீற்றர்கள் எருமைப் பாலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2019 ஆண்டு 2 ஆயிரத்து 84.2 மில்லியன் கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று 225 மெற்றிக் தொன் கோழி இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது பசுவளர்ப்பு மற்றும் பால் உற்பத்திகளிலே வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆகவே பால் உற்பத்தி சார்ந்த உற்பத்திகளின் தேவை அதிகரித்துள்ள போதிலும் உற்பத்தி நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

தேசிய பால் தேவையில் ஏறத்தாழ 38 சதவீத உள்நாட்டு பால் உற்பத்தியை மாத்திரமே பூர்த்தி செய்யப் போதுமானதாகவுள்ளதால், உள்நாட்டு உற்பத்திச் செயன்முறைகளிலுள்ள பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அதேவேளையில் உள்நாட்டு உற்பத்தியை மேலும் ஊக்குவித்தல் அவசியமானதாகும். எனவே உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், முட்டை மற்றும் கோழி வளர்ப்பில் இருக்கும் செலவீனங்களை கட்டுப்படுத்துதல் அல்லது உற்பத்தி விலை அதிகரிப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியன சுயதொழில் வாய்ப்பை அதிகரிக்க கூடியதாக அமையும்.

நாட்டில் புதிய தொழில் முயற்சிகளையும், உள்நாட்டு உற்பத்திகளையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், இவ்வாறு கால்நடை வளர்ப்பு குறித்த தகவல்களையும் சந்தை வாய்ப்புகளையும் கொண்டு தொழில்களை ஆரம்பிக்க முடியும்.

இதில் அரசாங்கமும் கவனம் செலுத்தி ஊக்குவிப்புகள் மற்றும் திட்டங்களை வகுப்பதன் மூலம் உள்நாட்டு கால்நடை வளர்ப்பை அதிகரிப்பதோடு, அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்க முடியும் எனத் தெரியவந்துள்ளது. (ஜ-4)

# பாரதம்



தேசபிதா மகாத்மா காந்தியின் 151 ஆவது ஜெயந்தினம் நேற்று கொண்டாடப்பட்டது. காந்தியின் நினைவிடத்தில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பல தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

## கொரோனா… சுறா மீன்க…

(கலிபோர்னியா)

முழு உலகையே அச்சுறுத்திவரும் கொரோனாவிற்கான தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு உலகம் முழுவதும் 5 இலட்சம் சுறா மீன்கள் அழிக்கப்படலாம் என சுறா மீன் பாதுகாவலர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிப்பதற்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், இந்த மருந்துக்கு சுறா மீனில் இருந்து எடுக்கப்படும், ஸ்குய்லின் எனப்படும் இயற்கை

## கடலில் தவறி விழுந்து மீனவர் மாயம்



(இராமநாதபுரம்)

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர் கடந்த புதன்கிழமை கடலில் விழுந்து மாயமானார். காணாமல் போன மீனவர் குறித்து இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை.

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று கடல் சீற்றத்தால் மீனவர் கடலில் மாயமான சம்பவம் இராமநாதபுரம் மீனவ கிராமங்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## நான்கு நாடுகளில் 3.5 தொன் கொக்கெய்ன் மீட்பு


(ஐரோப்பா)

நான்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்வாரம் மேற்கொள்ளப்பட்ட 54 ஒருங்கிணைந்த சோதனை நடவடிக்கையின் விளைவாக 3.5 தொன் கொக்கெய்ன், போதைப்பொருள் மோசடி மூலம் ஈட்டிய 2 மில்லியன் யூரோ மற்றும் 40 வாகனங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பெல்ஜியம், நெதர்லாந்து, இங்கிலாந்து மற்றும் ஸ்பெய்ன் ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஒருங்கிணைந்த சோதனையின்போது கைதானவர்களில் மூன்று பொலிஸ் அதிகாரிகளும் உள்ளடங்குவர்.

கைது செய்யப்பட்டவர்களில் 29 பேரில் 16 பேர் மீது இதுவரை போதைப்பொருள் கடத்தல், பணமோசடி மற்றும் ஒரு குற்றவியல் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான கப்பல் கொள்கலன்கள் வருவதைக் காணும் மாபெரும் ஐரோப்பிய துறைமுகம், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கான மிக முக்கியமான நுழைவு புள்ளிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. (நி)





கொடைக்கானலில் இருந்து… கிராமங்களில் ஒன்றானது போ… அழகான அருவி அமைந்துள்ள… புலவச்சாறு அருவி என அழை… அடிக்கடி நடைபெற்று வருகி… பயணிகள் வருவர் இப்பகுதியி… கியுள்ளனர். சுற்றுலா பயணிக… இப்பகுதி உயிருக்கு பாதுகாப்பு

## அமெரிக்க வெ… தவிர்த்த போப்ப…

(வாடிகன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோவை போப்பாண்டவர் பிரான்சிஸ் சந்திக்க மறுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ இத்தாலியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் வாடிகன் வந்து போப்பாண்வர் பிரான்சிஸை சந்திக்க விரும்பினார். ஆனால் இந்த சந்திப்பு மறுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி வாடிகனின் வெளியுறவு அமைச்சர் பால் கல்லாகர், கூறும்போது, "மைக்

## சீன தேசிய தினத்தில் ஹொங்கொங்கில் போராட்டம்

### 60 பேர் கைது

(ஹொங்கொங்)

சீன தேசிய தினத்தில் ஹொங்கொங்கில் அனுமதியில்லாமல் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட 60 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சீன மக்கள் குடியரசு அமைக்கப்பட்டதன் ஆண்டு தினம், அந்த நாட்டின் தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டின் தேசிய தினம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

ஹொங்கொங்கில் ஜனநாயக சீர்திருத்தங்களை வலியுறுத்துவோர், சீன தேசிய தினத்தன்று போராட்டங்களில் ஈடுபடுவது வழக்கம். இந்த ஆண்டும் அத்தகைய போராட்டங்களுக்கு இணையத்தளம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து, ஹொங்கொங்கில் காஸ்வே பே பகுதியில் பலர் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஹொங்கொங் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பிரிவினைவாத கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.


போராட்டங்களை ஒடுக்குவதற்காக நகரம் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அதனையும் மீறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (நி)



# வெளிநாடு



# னாத் தடுப்பு மருந்திற்காக கள் அழிக்கப்படும் அபாயம்



## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கண்டனம்

வரும்
தயா
ட்சம்
மீன்
ள்ள

ருந்து
மேற்
இந்த
எடுக்
ற்கை

எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.

தற்போது மற்ற மருந்துகள் தயாரிப்பதற்கும் இந்த எண்ணெய் துணை மருந்தாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த எண்ணெய்க்கு இயற்கையிலேயே அதிக நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதால், மருந்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு தொன் ஸ்குய்லின் எண்ணெய் எடுப்பதற்கு 3,000 சுறா மீன்கள் தேவைப்படுகின்றதாம்.

கலிபோர்னியாவில் இருக்கும் சுறா மீன் பாதுகாப்பு அமைப்பினர் தெரிவிக்கையில் "உலகம் முழுவதும் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு டோஸ் கொரோனா தடுப்பு மருந்து கொடுத்து நோய் எதிர்ப்பு சக்தி உருவாக்க 2,50,000 சுறா மீன்கள் தேவைப்படும். அதுவே, இரண்டு டோஸ்கள் கொடுக்க வேண்டும் என்றால், 5 இலட்சம் சுறா மீன்கள் தேவைப்படும் எனவும், கல்பர் மற்றும் பாஸ்கிங் சுறா மீன் வகைகளில் ஸ்குய்லின் எண்ணெய் அதிகளவில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

அத்தோடு, வருடந்தோறும் 30 இலட்சம் சுறா மீன்களை கொன்று அதில் இருந்து காஸ்மெடிக் மற்றும் இயந்திரங்களுக்கான எண்ணெய் எடுக்கப்படுவதாகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஸ்குய்லின் எண்ணெய்க்காக கரும்பை புளிக்க வைத்து அதில் இருந்து சிந்தெடிக் முறையில் எண்ணெய் எடுக்க விஞ்ஞானிகள் முயற்சித்து வருகின்றமையும் குறிப்பிடதக்கது. (நி)



**ந்து 45 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மேல்மலைக் போஞர் கிராமம். இங்கு வனத்துறை கட்டுப்பாட்டில் மிகவும் புள்ளது. இப்பகுதி புலவச்சாறு எனப் பெயர் பெற்றுள்ளதால் ழைக்கப்படுகிறது. அதிகமாக இங்கு சினிமா படப்பிடிப்புகள் ருகிறது. அத்தி பூத்தது போல் எப்போதாவது சுற்றுலா தியில் தற்போது அடிக்கடி சுற்றுலா பயணிகள் வரத்தொடங் ரிகளை வெகுவாகக் கவரும் வகையில் அருவி அமைந்துள்ள ாப்பு அற்ற நிலையில் காணப்படுகிறது.**

# புகழ்பெற்ற சுற்றுலாத்தளத்தில் தீ விபத்து; 13 பேர் உடல் கருகிப் பலி, 15 பேர் படுகாயம்

(பீஜிங்)

சீனாவில் புகழ்பெற்ற சுற்றுலாத்தளத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 13 பேர் பலியானதுடன் 15 பேர் படுகாயமடை ந்துள்ளனர்.

சீனாவில் பண்டிகைக் காலத்தை ஒட்டி நேற்று முன்தினம் முதல் எட்டு நாட்கள் தேசிய விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாத்தளங்களை நோக்கி மக்கள் படையெடுத்து வருகிறார்கள்.

## –சீனாவில் சோகம்–



ஷாங்க்சி மாகாணத்தில் உள்ள தைவான் நகரில் உள்ள டைட்டாய்சன் தீம் பூங்காவில் நேற்று அதிகளவான மக்கள் கூடியிருந்தனர்.

அருங்காட்சியகங்கள், படகு சவாரிகள் மற்றும் பல்வேறு சிறப்பு அம்சங்கள் கொண்ட இந்தப் பூங்காவில் மக்கள் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்த நிலையில், பனி விளக்கு மற்றும் பனி சிற்பங்களின் கண்காட்சி மண் டபத்தில் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத் தில் 13 பேர் உடல் கருகி பலியாகினர்.

மேலும் 15 பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (நி)

# வளியுறவு அமைச்சர் சந்திப்பை ப்பாண்டவர்



பொம்பியோவை போப்பாண்டவர் சந்திக்க மாட்டார்.

தேர்தல் காலத்தில் போப்பாண்டவர் எந்த அரசியல் பிரபலங்களையும் சந்திப்பது இல்லை என்பதை ஏற்கனவே தெளிவுபடுத்தி உள்ளார். எனவே இதுதான் காரணம்" என குறிப்பிட்டார்.

சீனாவில் ஆயர் நியமனத்தில் சீன அரசின் கருத்தை கேட்பதாக 2018 ஆம் ஆண்டு, சீனாவுடன் வாடிகன் ஒரு ஒப்பந்தம் செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்பந்தம் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் புதுப்பிக்கப்பட உள்ளது. இந்த நிலையில் மைக் பொம்பியோ ரோமில் அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் பேசியபோது, சீனாவில் மத சுதந்திரத்தை காக்க வாடிகனுக்கு அழைப்பு விடுத்தார். மேலும், சீனாவை விட மத சுதந்திரம் எங்கும் தாக்குதலுக்கு ஆளாகவில்லை என்றும் கூறினார்.

மைக் பொம்பியோவின் பேச்சு வாடிகனுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# 'கல்பனா சாவ்லா' விண்கலத்தின் பயணம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது


(வோஷிங்டன்)

'கல்பனா சாவ்லா' விண்கலத்தை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பும் நடவடிக்கை இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டதாக நாசா அறிவித்துள்ளது.

குறித்த விண்கலம் விண்ணில் செலுத்துவதற்கு இரண்டு நிமிடங்கள், 40 விநாடிகள் இருக்கும்போது தரைக்கட்டுப்பாட்டு அமைப்பில் கோளாறு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து பயணம் இரத்துச் செய்யப்பட்டது.

விண்வெளியில் அமைந்துள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பொருட்களைக் கொண்டு செல்வதற்காக, அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா சார்பில் சிக்னஸ் கார்கோ விண்கலம் அனுப்பப்படவுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த நாசா விண்வெளி வீராங்கனையான மறைந்த கல்பனா சாவ்லாவின் பெயர் சூட்டப்பட்ட இந்த விண்கலத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விண்ணில் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.



வெர்ஜினியாவில் இருந்து விண்வெளி பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான நோர்த்ரூப் கிரம்மானின் அன்டரேஸ் ரொக்கெட் மூலம் விண்கலம் அனுப்பப்படவிருந்தது.

எனினும், இறுதி நேரத்தில் தரைக் கட்டுப்பாட்டு அமைப்பில் கோளாறு கண்டறியப்பட்டதுடன் கோளாறை சரி செய்யும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (நி)

# பனைசார் உற்பத்திகளுக்கு எதிர்காலத்தில் வரிவிலக்கு

## அருந்திக்க பெர்னாண்டோ

(கொழும்பு)

**பனைசார் உற்பத்திப் பொருட்களுக்கு எதிர் காலத்தில் வரிவிலக்கு அளிப்பது தொடர்பில் தான் அரச தரப்பில் பேசிக் கொள்வதாக உள்நாட்டு சிறுகைத்தொழில் பனை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.**



பரணி பகுதியில் அமைந்துள்ள பனை தொழிற்சாலை உற்பத்தி நிலையத்திற்குச் சென்ற அமைச்சர் அங்கு உள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், எதிர்காலத்தில் பனம் பொருள் சார் உற் பத்திப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து இருந்தார்.

அத்துடன் மானிய அடிப்படையில் கடன் களைப் பெற்று அவர் களின் வாழ்வாதாரத் தினை மேலும் மேம் படுத்தும் முகமாக பல் வேறு திட்டங்களை தான் முன்னெடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் இதன்போது இராஜாங்க அமைச்சர் கருத்துத் தெரி வித்தார்.

குறிப்பாக பனம் பொருள்சார் உற்பத்திப் பொருட்கள் மூலம் இந்த தேசிய உற்பத்தியில் இவர்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்து இருக்கின்றது என்பதில் நான் பெருமை அடை கிறேன். ஜனாதிபதியின் எண்ணக் கருவுக்கு அமைய பனை அபிவி ருத்தியினை மென் மேலும் அபிவிருத்தி செய்து அதன் மூலம் அந் நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடி யும்.

கடந்த அரசாங்க ஆட்சியின்போது பனம் பொருட்களுக்கு அதிகள வான வரி அதிகரிப்பு செய்யப்பட்டிருந்தது. இத னால் உற்பத்தி செல வினை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலை இந்த உற்பத்தியாளர் களுக்கு காணப்பட் டது. (நி)

# 20 அடி ஆழத்தில் பாய்ந்தது பேருந்து

## மாணவர்கள் உட்பட 52 பேர் காயம்



(ஹற்றன்)

ஹற்றன் - டயகம பிரதான வீதியின் போடைஸ் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 52 பேர் காய மடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக் கிழமை காலை 7 மணி யளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டயகம பகுதியில் இரு ந்து ஹற்றன் நோக்கி பயணித்த தனியார் பேருந்து வீதியை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் தலைகீழாக கவிழ்ந்தது.

இதன்போது 24 பாட சாலை மாணவர்கள் உள்ளிட்ட 52 பேர் காய மடைந்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடை ந்த அனைவரும் சிகிச் சைகளுக்காக டிக்கோயா கிழங்கன் வைத்தியசா லையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித் தனர்.

விபத்தில் காயம டைந்த பயணிகள் குறி த்து அச்சமடைய தேவை யில்லை எனவும் பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர் புடைய பேருந்தின் சாரதி கைது செய்யபட்டுள்ள நிலையில், விபத்து தொட ர்பான மேலதிக விசார ணைகளை ஹற்றன் பொலிஸார் முன்னெடு த்து வருகின்றனர். (நி)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முதுமையில் மனநோய்

இன்று ஒரு தகவலிலே மனநோயைப் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டி ருக்கின்றோம். ஏன்? என்று எனக்கும் தெரியவில்லை... தற்செயலாக அடிக்கடி இதைப் பற்றி பேசுவது போல் ஆகிவிடுகின்றது. சின்னப் பிள்ளைகளுக்கு மனது எப்படி பாதிக்கப்படுவது பற்றி ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தோம்.

வயதானவர்களுக்கு மனது எப்படி பாதிக்கப்படுவது என்பதைப் பற்றி இன்றைக்குப் பேசப் போகின்றோம். மனநோய் என்பது ஒரு பொதுவான நோய் தான். இது எல்லோருக்கும் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இருந்தாலும் இளமையின் தொடக்கத்திலேயும் முதுமையின் தொடக்கத்திலேயும் இது அதிகமாக ஏற்படுவதுண்டாம்.

வயதான காலத்தில் இது ஏன் அதிகமாக வருகின்றது தெரியுமா? அந்த சமயத்திலே மூளையோடு செயற்றிறன் பாதிக்கப்படுகின்றது. அதனால் மற்றவர் களை விட இவர்களுக்கு அதிகமாக மனநோய் வருவதற்கு வாய்ப்பு இருக் கின்றது.

அதுவரைக்கும் தனியாக சுதந்திரமாக இருந்தவர்கள்... வயதானதன் பின்னர் அடுத்தவர்களை எதிர்பார்த்து இருக்க வேண்டிய சூழ்நிலை. சமூக ரீதியாக பார்த்தாலும், உடல்நல ரீதியாக பார்த்தாலும் இவர்கள் எல்லாம் மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டிய நிலை. சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் செய்து கொண்டு இருந்தவர்கள்... சும்மாவே உட்கார்ந்து கொண்டு இருக்க வேண்டிய சூழ்நிலை. இதனால் தான் மனது கெட்டுப் போகின்றது. முதியவர்களுக்கு ஏற்படுகின்ற மனநிலை பாதிப்பை மூன்று வகையாக பிரிக்கின்றார்கள். முதலாவது மனக்குழப்பம், இரண்டாவது அறிவுத்திறன் வீழ்ச்சி, மூன்றாவது மனத்தளர்ச்சி நோய்.

இரத்தக் குழாய்களிலே ஏற்படுகின்ற மாற்றங்களாலே மூளைக்குத் தேவை யான சத்து குறைந்து போகின்றது. அதனாலே மூளை சரிவர வேலை செய்யா மல் ஒருவிதமான குழப்பம் ஏற்பட்டுப் போகின்றது. இந்த நிலைமையில் சுற்றுப் புறத்தையே மறந்துவிடுவர்.

நாம் எங்கேயிருக்கின்றோம்– என்ன செய்கின்றோம்– நம்மை சுற்றி என்ன நடக்கின்றது? யார் யார் இருக்கின்றார்கள்? ஒன்றும் புரியாது.

நேரம், காலம், இடம் தெரியாமல் அவரும் குழம்புவார். அடுத்தவர்களையும் குழப்புவார். இல்லாததை இருப்பதாக நினைப்பார். பயந்த நிலையிலேயே காணப்படுவார். இந்த நிலை சில நொடிகள் அல்லது சில மணி நேரம் நீடிக்க லாம். பின்பு சரியாகிவிடும். இதற்கு என்ன காரணம் தெரியுமா? மூளைக்கு போகும் இரத்தம் திடீர் என்று குறைந்து விடுகிறது.

தூக்க மாத்திரை, நரம்புத் தளர்ச்சிக்குக் கொடுக்கும் மாத்திரை இது மாதிரி சில மருந்துகளாலேயும் மனதில் குழப்பம் உண்டாகும். உடம்பிலே வேறு பாகங்களில் நோய்க்கிருமிகள் பாதிப்பு இருந்தாலும் மனக் குழப்பம் வரும்.

அடிப்படைக் காரணம் என்னவென்று கண்டு பிடித்து அதற்குத் தகுந்த மாதிரி சிகிச்சை கொடுக்க வேண்டும். அறிவுத்திறன் வீழ்ச்சி என்று சொல்கின்றோம் அது எதனால் வருகின்றது. இன்னமும் சரியாக கண்டு பிடிக்க முடியவில்லை. அதனால் இதற்குத் தகுந்த சிகிச்சையும் கிடையாது. 40 வயதிற்குப் பின் மூளை செல்கள் வீழ்ச்சியடைய ஆரம்பிக்கின்றது. தொடர்ந்து வயது ஆக அறிவுத் திறனுக்கு உறைவிடமான மூளைச் செல்கள் மேலும் வீழ்ச்சியடைகின்றது. அதனால் அறிவுத் திறனிலேயும் வீழ்ச்சி ஆரம்பமாகி விடுகின்றது.

நோயாளியின் மனப் போக்கை குடும்பத்திலே உள்ளவர்கள் எல்லோரும் நன்றாக புரிந்து கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும். அதுதான் நாம் அவருக்கு செய்யக் கூடிய பெரிய உதவி. மனத் தளர்ச்சி நோய் இருக்கின்றது. அது எப்படி தெரியுமா? இந்த நோயாலே பாதிக்கப்பட்டவர்கள் எந்தக் காரணமும் இல்லாமல் மனம் தளர்ந்து போய்விடுவார்கள். கவலைப் படுவார்கள். அவர்கள் பேரிலேயே அவர்களுக்கு நம்பிக்கை இருக்காது. அவர்களையே நினைத்துக் கொண்டு கஷ்டப்படுவார்கள். தங்களைத் தாழ்வாக நினைப்பவர்கள் அடுத்தவர்களுக்கு நாம் சுமையாக இருக்கின்றோம் என்று நினைத்து ஏங்குவார்கள்.

எங்கள் உடம்பு கெட்டுப் போய்விட்டது. எங்களை யாரோ தண்டிக்கப் போகின் றார்கள்.. இப்படி நினைத்துக் கொண்டு மனதிற்குள்ளே போராடுவார்கள். பல சமயங்களிலே இது மாதிரி நினைப்பினால் தற்கொலை செய்து கொள்வதற்குக் கூட முயற்சி செய்வார்கள்.

எதிலேயும் ஆர்வம் இருக்காது. பசி குறையும் அதனால் சாப்பாடும் குறையும். உடம்பு இளைக்கும். முகத்திலே ஒரு விதமான வெறுப்புணர்ச்சி வெளிப்படும். இரவு தூக்கம் வராமல் கஷ்டப்படுவார்கள்.

இந்த மனத்தளர்ச்சி நோய்க்கு இப்பொழுது நல்ல மருந்து எல்லாம் இருக் கின்றது. அதிலேயே குணமாகிவிடும். சில பேருக்கு மட்டும் மின் சிகிச்சை தேவைப்படும். ஆகக் கூடிய வயதான காலத்திலே உடம்பையும் மனதையும் நன்றாக வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். உடம்பு நன்றாக இருந்தால் மனதும் நன்றாக இருக்கும். சத்துள்ள ஆகாரம் சாப்பிட வேண்டும். பேச்சுத் துணைக்கு யாரையாவது தயார் செய்து கொள்ள வேண்டும். சூழ்நிலைக்கு ஒத்துப் போக வேண்டும்.

ஒரு பாட்டி தன்னுடைய கணவரை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் வந்தார் கள். டாக்டர் இவரைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். யாரையாவது எதிரிலே பார்த்துவிட்டால் உடனே பேச ஆரம்பித்து விடுகின்றார்.

“அது ஒன்றும் தப்பில்லையே.. தனிமையைத் தவிர்ப்பதற்காக யாரையாவது எதிரிலே பார்த்தால் கொஞ்சம் பேசியிருப்பார் என்றார் டாக்டர். அதற்கு அந்தப் பாட்டி ” அப்படி இல்லை டாக்டர் யாராவது மனிதனை எதிரிலே பார்த்துப் பேசினால் பரவாயில்லை. முகம் பார்க்கின்ற கண்ணாடியை எதிரிலே பார்த்தால் கூட உடனே பேச ஆரம்பித்து விடுகின்றார். அதனால் தான் உங்களிடம் அழை த்துக் கொண்டு வந்தேன்.. என்றார்.


# வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்


# மாணவர்களிடையே இப்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்

## ஜனாதிபதி கோட்டாபய

“ (கொழும்பு)

**ஒவ்வொரு பாடசாலைக்கும் நூலகம் மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பிள்ளைகளின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை பராமரிக்க முடியுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.** ”





சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஷ்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பாடசாலைகளில் நூலக வசதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டில் ஐந்து மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நூலகங்களை வழங்கி சிறுவர் தின கொண்டாட்டங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணைந்து கொண்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளின் மாணவர்களை ஜனாதிபதி நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

குறித்த ஐந்து பாடசாலைகளுக்கும் நூலகங்களுக்கான நன்கொடை ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேவையில் இருந்து நிறுத்தப்பட்ட பழைமையான பேருந்துகள் திருத்தியமைக்கப்பட்டு நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை, ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் தேசிய நூலகம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியில் வெளியீட்டாளர்கள் நன்கொடையளித்த புத்தகங்களும் குறித்த நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 20 ஆல் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் முரண்பாடு

(கொழும்பு)

20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தால் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும், 20 இற்கு ஆதரவளித்து அல்லது வாக்களிப்பின்போது நடுநிலை வகித்து ஆளுங்கட்சிக்கு நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கமும், இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகவே தற்போது தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ-4)

# சுனாமியால் காணாமல்போய் மீண்ட மகன் உரிமைகோரும் இரு தாய்மார்

(அம்பாறை)



2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் காணாமல் போன ஐந்து வயது சிறுவன் 21 வயது இளைஞராக அண்மையில் மாளிகைக்காட்டு பிரதேசத்திற்கு வீடு திரும்பிய விடயம் தொடர்பில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை பிரதேசத்தில் வளர்ப்பு தாயாராக அடையாளப்படுத்தப்பட்ட தாயாருக்கும் மாளிகைக்காட்டு பிரதேசத்தில் சுனாமியால் காணாமல் போன மகனாக அடையாளப்படுத்தப்பட்ட தாயாருக்கும் இடையே ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பில் ஆராய நேற்று முன்தினம் காலை இரு தரப்பினரையும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது.

இரு தரப்பினரிடமும் விசாரணை செய்த சம்மாந்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகள் இரு தரப்பினரிடமும் வாக்கு மூலத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இருதரப்பினரும் அந்த மகன் தனக்கு சொந்தமான பிள்ளை என்பதற்கான ஆதாரங்களுடன் தமது பக்க நியாயங்களை முன்வைத்தனர்.

தீர விசாரித்த சம்மாந்துறை பொலிஸார் இவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க எதிர்வரும் ஐந்தாம் திகதி நீதிமன்றத்தில் வழக்கொன்றை பதிவு செய்ய நடவடிக்கை எடுத் துள்ளனர்.

காணாமல் போனதாக மாளிகைக்காட்டு தாயிடம் திரும்பி வந்த மகன் மீண்டும் வளர்ப்புத்தாயிடம் திரும்பி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கறுப்பு சந்தையில் உச்சத்தைத்தொட்ட மஞ்சள் விலை

(கொழும்பு)



400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட மஞ்சள் ஒரு கிலோகிராம் தற்போது கறுப்பு சந்தையில் சுமார் 4500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக கொழும்பு - புறக்கோட்டை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து மஞ்சள் இறக்குமதியைத் தடை செய்வதாகக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரசு அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து மஞ்சளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவில் இருந்துதான் அதிகளவான மஞ்சள் இறக்குமதி செய்யப்படுகிறது.

தற்போது மஞ்சளுக்கு பதிலாக கோதுமைமா மற்றும் மஞ்சள் நிறப் பூச்சுக்களைக் கலந்து போலி மஞ்சள் இலங்கை சந்தைகளில் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஜ-4)

# கட்டுநாயக்கவால் பெரும் இழப்பு வருமானம் முற்றாக முடக்கம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றை அடுத்து கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்பட்டதால் ஏற்பட்ட இழப்பு ரூ.9 பில்லியனைத் தாண்டியுள்ளதாக விமான நிலையம் மற்றும் சிவில் விமான சேவைகள் துணைத் தலைவர் ராஜீவ் சூரியராச்சி சிங்கள ஊடகத்திற்குத் தெரிவித்தார்.

சராசரி இலாபம் தற்போது ரூ.15 பில்லியனாக இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு இலாபம் ரூ.600 மில்லியனாக வரையறுக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

விமானசேவை செயற்பாடுகள் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சரக்கு விமானங்களின் செயற்பாடு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனா வைரஸ் பரவியதைத் தொடர்ந்து கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்பட்டதால் நாடு பெரும் வருமான இழப்பை சந்தித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# கடல் புறா

## எத்தனை படைக்கலங்கள்!

தவிர, திரைமறைவில் இருந் திருக்கிறாய். ஒளிபவன் கள்வனாய் இருக்க வேண்டும். இல்லையேல் தமிழனாயிருக்க வேண்டும். தமிழர் களைத்தான் சில நாட்களாகக் கலிங்க அதிகாரிகள் சிறைக்குள் தள்ளி வருகிறார்கள்" என்று சுட்டிக் காட்டினாள் அந்தப் பெண்.

அத்துடன் அவள் மீண்டும் அவனை ஏற இறங்கப் பார்த்து, "ஆமாம் நான் தப்புத்தான் செய்து விட்டேன். நீ திருடனல்ல. தமிழன் தான். திருடனுக்கு இத்தகைய வாள் தேவையில்லை. பொருளை எடுத் துக் கொண்டு ஓடுபவனுக்கு வாள் ஒரு வீண் சுமை.

அப்படியே ஆயுதம் தேவை யானாலும் தூங்கும்போது கொல்ல ஒரு குறுவாள் போதும். இத்தகைய பெரிய, அகலமான வாள் தேவை யில்லை. தவிர உன் வாளில் இரத்தக் கறையும் இருக்கிறது. ஒருவேளை சற்றுமுன் கலிங்க வீரர்கள் துரத்தி வந்தது உன் னைத்தானோ?" என்று சந்தே கமும் குரலில் ஒலிக்கக் கேட்டாள்.

அவள் ஊகத்தைக் கண்டு பெரி தும் வியந்தான் கருணாகர பல்ல வன். 'அழகுடன் புத்தி இணைவது அபூர்வம்! அத்தகைய அபூர்வம் இதோ இருக்கிறது' என்று தனக் குள்ளேயே சொல்லிக்கொண்ட அந்த வாலிபன் அவள் கேட்டதற் குப் பதில் சொல்ல முற்பட்டு, "ஆம். என்னைத்தான் துரத்தி வந்தார்கள்" என்றான்.

"துரத்தி வந்தார்கள், சேதமும் பட்டிருக்கிறார்கள்," என்றாள் அவள், அந்த வாலிபன் வாளில் தோய்ந் திருந்த குருதியைக் கண்டு.

"எனக்கு ஓரளவு போரிடத் தெரி யும்" என்று சங்கோஜத்துடன் கூறினான் இளைய பல்லவன்.

"இதில் அடக்கம் வேண்டாம். நீ திறமையுடன் போரிடக் கூடியவன். எனக்குத் தெரியும்".

"எப்படித் தெரியும்?"

"நான் வாள் சுழற்றிய முறை எங்கள் நாட்டின் தனிப்பயிற்சி. அதை உபயோகித்தால் எதிரி கையிலிருக்கும் வாள் உடனே பறக்க வேண்டும். ஆனால் உன் வாள் திடமாக நின்றுவிட்டது. இந்த முயற்சியில் நான் தோல்விய டைவது இதுவே முதல் முறை. இன்னொரு முறை முயன்றால் கண்டிப்பாய் வெற்றியடைவேன்!"

இளைய பல்லவன் நகைத்தான். "என்னிடம் வாள் போரில் வெற்றி யடைய முடியாது பெண்ணே. ஆனால், வேல் போரில் வெற்றிய

காலத்தின் பதிவு 08



சாண்டில்யன்

டையலாம்." என்று கூறவும் செய் தான்!

"வேல் போரா?" ஏதும் புரியாமல் வினவிய அவள் விழிகள் இளைய பல்லவன் முகத்தில் நிலைத்தன.

"ஆம் பெண்ணே! கருணாகர பல்லவனை வாள் போரில் வென் றவர்கள் இதுவரை இல்லை. ஆனால் அதோ உன் முகத்திலிருக்கும் அந்தக் கூர்வேல்கள்! அவற்றின் சக்தி வேறு, உன்னிடம்தான் எத்தனை படைக்கலங்கள்! ஆர்க் கும் நூபுரங்கள், பேரி, வெற்கண், வெம்புருவம், போர்வில், முரசு போல் ஒலிக்கும் காலாபரணம், வேல் கண்கள், போர் வில்லெனை வளைந்த புருவங்கள் எத்தனைப் போர்க் கருவிகள், இவற்றை வெற்றி கொள்ள என்னால் முடியாது, முடி யாது!" என்றான்.

அவன் சரச வார்த்தைகளை அவள் கவனிக்கவில்லை. உவமை களின் இன்சொற்களைக் கவனிக்க வில்லை. அவள் காதில் ஒலித்த தெல்லாம், 'கருணாகர பல்லவன்' என்ற இரண்டே சொற்கள்தான்.

"எந்தக் கருணாகர பல்லவர்? இளைய பல்லவரா!" என்று பிரமிப் புடன் கேட்டாள் அந்த அழகி.

அவள் பிரமிக்க வேண்டிய கார ணம் இளைய பல்லவனுக்குப் புரிய வில்லை. "ஆம்" என்று பதில் சொன்னான் குழப்பத்துடன். அவள் கேட்ட அடுத்த கேள்வி, அவன் பிர மிப்பை உச்ச நிலைக்குக் கொண்டு போயிற்று.

"எந்த இளைய பல்லவர்? அந பாயச் சோழர் நண்பரா?"

"ஆம்."

இதைக் கேட்டதும் மிகுந்த குழப் பத்துக்கு உள்ளான அவள் முகத்தில் அடக்கத்தின் சாயை அதிக வேக மாகப் படர்ந்தது. கண்கள் நிலத்தை நோக்க, "அடடா! உங்களை இத் தனை நேரம் ஏக வசனத்தில் மரியாதையின்றிப் பேசிவிட்டேனே!" என்றாள் அவள்.

அவள் திடீர் மாற்றத்துக்கு அப் பொழுதும் காரணத்தை அறியாத கருணாகர பல்லவன், "அதனால் பாதகமில்லை. என்னை உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட் டான்.

"பார்த்ததில்லையே தவிர, உங் களை நாடித்தானே இங்கு வந்தி ருக்கிறோம்?" என்றாள் அவள்.

"வந்திருக்கிறோமென்றால் இன் னொருவர் யார்?" என்று வினவி னான்.

"என் தந்தை!"

"யார் உன் தந்தை?"

அவள் மெள்ள மெள்ளப் பெயரை உச்சரித்தாள். அந்த உச்சரிப்பு அவனை ஓர் உலுக்கு உலுக்கியது. மிதமிஞ்சிய பிரமிப் பால், "யார்? யார்? இன்னொரு முறை சொல்!" என்று சற்று இரைந்து கூவிக் கொண்டு அந்தப் பெண்ணை இரண்டே அடிகளில் நெருங்கினான்.

### பயங்கர ஓலை

அறை விளக்கின் மங்கலான தங்க ஒளியிலும் மங்காத தங்கமெ னத் திகழ்ந்த தேக லாவண்யத் துடன் தேவதை போல் நின்று அந்த எழிலரசியைக் கண்டதும் அரை மயக்கத்துக்குள்ளான இளைய பல்லவன், அவள் பேசப்பேசச் சுயநிலையை அடைந்தான். ஆனா லும், அவள் தந்தையின் பெயரை உச்சரித்ததுமே 'பெரும் அதிர்ச்சி யையும் விபரிக்க இயலாத வியப்பு மடைந்தவனாய், என்ன செய்கி றோமென்பதை அறியாமல், "யார்! யார்! இன்னொருமுறை சொல்!" என்று கூவிக்கொண்டு தனக்கும் அவளுக்குமிருந்த இடைவெளியை இரண்டே விநாடிகளில் கடந்து, அவள் இருகைகளையும் தன் கைகளால் இறுகப் பிடித்துக் கொண்டதன்றி அவளைக் கூர்ந்து நோக்கவும் செய்தான்.

எதிர்பாராத விதமாக அந்த வாலிபன் திடீரெனத் தன் கையைப் பிடித்ததைக் கண்டு அவள் அஞ்ச வுமில்லை. திமிறிக் கைகளை விடுவித்துக் கொள்ளவுமில்லை. அவள் விழிகள் நன்றாக உயர்ந்து மிகுந்த கோபத்துடன் அவன் விழிக ளுடன் விநாடி நேரம் உறவாடின. பவள இதழ்கள் முதலில் வெறுப்பு டன் மடிந்து, பிறகு சற்றே விரிந்து சொற்களை உதிர்த்தன.

"என் தந்தையின் பெயரை இன்னொருமுறை கேட்க என் அருகே வர அவசியமில்லை. கைகளைப் பற்றி நெறிக்கவும் தேவையில்லை!" என்றாள் அந்த அழகி, சொல் ஒவ்வொன்றிலும் அனல் வீச.

கனலை வாரித் தெளித்த, வெறு ப்பை அள்ளி வீசிய அந்தச் சொற் களுக்குக்கூட கருணாகர பல்ல வனைச் சுயநிலைக்குக் கொண்டு வரும் சக்தி இல்லை. அந்த ஆரம்ப இரவின் சம்பவங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக அவன் சிந்தனையில் வலம் வந்ததால், அந்த இரவு தன்னைக் குழப்புவ தற்கும் தன்னைத் திரும்பத் திரும்ப வியப்பின் வசப்படுத்துவதற்குமே ஏற்பட்டதோ என்ற நினைப்பிலேயே அவன் மனம் ஆழ்ந்து கிடந்தது.

(தொடரும்)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மைத்திரியும் ரணிலுமே பொறுப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.


உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அதன் பொறுப்பை, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஏற்க வேண்டும்.

அமைச்சரவையில் இருந்தாலும் அனைவரும் அதில் தலையிட முடியாது. அவர்கள் இருவருக்கும் தான் அந்த பொறுப்பு உள்ளது.

தோல்வி ஏற்பட்டால், அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்கள் ஏற்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பு என்பது அனைவராலும் தலையிடக் கூடிய ஒன்றல்ல.

பாரியளவில் பொதுமக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு பயங்கரவாதம் உருவாகியது.

கட்டாயமாக குறித்த இருவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)





# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட மதுபானம் மற்றும் குடிநீர் போத்தல்கள் மீட்பு

(கொழும்பு)

சுங்க வரி செலுத்தப்படாமல் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என சந்தேகிக்கப்பட்ட அடையாளம் காணப்படாத திரவம் மற்றும் குடிநீர் போத்தல்கள் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

2018 இல் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு 2019 நவம்பரில் பங்களாதேஷிற்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்ததாகக் கூறப்படும் 40 அடி கொள்கலன்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு சுங்க வரி செலுத்தப்படாமல் இவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எனினும் இதனை இறக்குமதி செய்த தனியார் நிறுவனம் 2019 நவம்பரில் இவற்றை மீள் ஏற்றுமதி செய்வதாகக் கூறிய போதிலும் நீண்டகாலமாக அதனைச் செய்யாமல் காலம் தாழ்த்தியுள்ளனர்.

அதனடிப்படையில் சுங்க திணைக்கள அதிகாரிகளின் நீண்ட விசாரணைகளைத் தொடர்ந்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2133

**கவி**




**சஜீபன்**




**றெஜினா**




**மதுஷா**




**மீரா**




**தனா**

சேர்ப்பது மிகக் கடினம்..
செலவு செய்வது மிக எளிது...
பணம் மட்டும் அல்ல...
உறவுகள் உள்ளத்தில் நாம்
சேர்த்து வைக்கும் நல்ல
எண்ணமும் கூட..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மன்னார் நானாட்டானில் கிடைத்த பண்டையகால நாணயங்கள் தமிழகப் பாண்டியருக்கு உரியதா?



பேராசிரியர்
ப.புஸ்பரட்ணம்

18.09.2020 அன்று மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சந்திக்கு அருகில் உள்ள வடக்கு வீதி என்ற இடத்தில் வீடு கட்டுவதற்காக குழிகள் வெட்டியபோது ஒரு குழியில் காணப்பட்ட பானையில் இருந்து 1904 செப்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டது என்ற செய்தி 25.09.2020 அன்றிலிருந்து ஊடகங்களில் முக்கிய செய்தியாகக் காணப்படுகின்றது.

இந்நாணயங்களை அச்சத்துடன் பார்த்த அக்கிராம மக்கள் பூதம் பாதுகாத்து வந்த இந்நாணயங்களை வீட்டில் வைத்திருப்பது ஆபத்து என கூறியதால் அவற்றால் அச்சமடைந்த நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர், அந்நாணயங்கள் அனைத்தையும் தற்போது முருங்கன் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார். அந்நாணயங்கள் நீதிமன்றத்தின் ஊடாக இலங்கைத் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்க இருப்பதாக அறிகின்றோம்.

வட இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான நாணயங்கள் முதன் முறையாக ஒரேயிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடத்தில் பல குழிகள் தோண்டப்பட்டுள்ளன. ஆனால் அக்குழிகள் எவற்றிலுமே புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை.

மாறாக இக்குழிகளில் காணப்படும் களிமண் அருகிலுள்ள காணிகளின் மண்ணின் நிறத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக காணப்படுகின்றது.

இதுபற்றி வீட்டு உரிமையாளரிடம் கேட்டபோது இற்றைக்குப் 15 ஆண்டுகளுக்கு முன்னர் இம்மண்ணை அருகில் உள்ள குளத்தில் இருந்து கொண்டு வந்து கொட்டியதாகக் கூறினார். இதனால் இங்கு பானையோடு கிடைத்த நாணயங்கள் குளத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணோடு வந்தவை என்பது உறுதியாகத் தெரிகின்றது.

இந்நாணயங்களில் மீன் சின்னாங்களும், வாளும் பொறிக்கப்பட்டுள்ளதால் இவற்றைப் பாண்டியர் முடியாட்சிக்குரிய நாணயங்கள் என ஊடகங்களில் செய்திகள் கிடைக்கவில்லை.

முருங்கன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நானாட்டான் பாடசாலை ஒன்றில் காட்சிக்கு வைப்பதற்காக கொடுத்த நாணயங்களையும், களவாய்வின் போது எமக்குக் கிடைத்த இரு நாணயங்களையும், ஊடகங்களில் வெளிவந்த நாணயங்களின் புகைப்படங்களையும் வைத்துப் பார்க்கும் போது இந்நாணயங்களின் முன் பக்கத்தில் மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடத்தின் மேல் இடப்பக்கமாக அல்லது வலப்பக்கமாக பார்த்த நிலையில் படுத்திருக்கும் நந்தியின் உருவமும் இதற்கு இரு புறத்திலும் குத்து விளக்கும் நந்தியின் தலைக்கு மேல் பிறைச் சந்திரனும் நாணய விளிம்பினை ஒட்டி சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன.



நானாட்டானில் கண்டுபிடிக்கப்பட்ட நாணய வகைகள்

நாணயத்தின் பின்பக்கத்தில் பீடத்தின் மேல் கிடையாக அல்லது நேராக இரண்டு மீன் சின்னாங்களும் இவற்றின் இரு புறத்திலும் குத்து விளக்கும் விளிம்பை ஒட்டி பிறைச் சந்திரனும், சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன.

ஆயினும் நாணயங்களின் அளவு, நிறை, வடிவமைப்பு, அழகு, தெளிவு என்பவற்றில் வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வகையான நாணயங்கள் இலங்கையில் சிறப்பாக வட இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றைப் பிரின் செப் (1858), எலியட் (1858), கொட்றிங்ரன் (1924), டுல்பே (1966), மிச்செனர் (1998) முதலான நாணயவியல் அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். சேயோன் என்ற நிலவியலாளர் வட இலங்கையில் மாதோட்டம், மன்னார், கந்தரோடை முதலான இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கான இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து 1982 இல் வெளியிடப்பட்ட தனது இலங்கையின் பண்டையகால நாணயங்கள் என்ற நூலில் ஆவணப்படுத்தியுள்ளார். 1997 இல் பேராசிரியர் கிருஸ்ணராஜா கந்தரோடையில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1990 களில் இருந்து வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட எமது தொல்லியல் மேலாய்வின் போது பூநகரி, ஈழவூர், மாதோட்டம், உடுத்துறை, இயற்றாலை, அண்மையில் கட்டுக்கரை முதலான இடங்களிலும் இவ்வகை நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இக் கண்டுபிடிப்புக்களின் தொடர்ச்சியாக நானாட்டானில் கிடைத்த நாணயங்கள் காணப்பட்டாலும் அவை வகையிலும் தொகையிலும் அதிகமாக இருப்பதால் வட இலங்கையின் வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வில் இந்நாணயங்கள் அதிக முக்கியத்துவம் பெற இடமுண்டு என்பதில் ஐயமில்லை. பொதுவாக பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது யாழ்ப்பாண அரசின் தோற்றத்திற்கு முன்னர் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்களை தமிழகத்துடனான அரசியல் வாணிபத் தொடர்பால் வந்தவை என்றே கூறப்பட்டு வந்துள்ளது. இதற்கு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தின் பின்னரே இலங்கைத் தமிழரிடம் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றியது என்ற நம்பிக்கை முக்கிய காரணமாகும்.

ஆனால் இலங்கையின் சமகாலத் தொல்லியல் கண்டு பிடிப்புக்கள் சங்க காலத்தின் சமகாலத்தில் இருந்து தமிழகத்தைப் போல் இலங்கைத் தமிழரிடமும் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றி வளர்ந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அண்மையில் நானாட்டானில் கண்டு பிடிக்கப்பட்ட நாணய வகைகளை பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் அந்நாணயங்கள் வட இலங்கையில் கிடைத்ததாகவே கூறுகின்றனர்.

இவற்றின் எண்ணிக்கை யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட சேது மொழி பொறித்த நாணயங்களின் எண்ணிக்கையை விட்ப் பல மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. வட இலங்கைக்கு வெளியே இவ்வகை நாணயங்கள் மிக அரிதாக அநுராதபுரத்திலும் அக்குறுகொட என்ற இடத்திலும் கிடைத்துள்ளன. தமிழ் நாடு சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகையான நான்கு நாணயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவையும் யாழ்ப்பாணத்தில் இருந்தே பிற்காலத்தில் பெறப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதனால் நானாட்டானில் கிடைத்த நாணய வகைகளை வட இலங்கையில் இருந்த அரசோடும், ஆட்சி செய்த அரசர்களோடும் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும்.

இந்நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், சின்னங்கள், குறியீடுகள் முதலியன இந்து மதத்தை சிறப்பாக சைவ சமயத்தைப் பிரதிபலிப்பதால் இந்நாணயங்களை வெளியிட்ட அரசின் மதமாக இந்து மதம் இருந்துள்ளதெனக் கூறலாம்.

இதுவரை காலமும் இந்நாணயங்களை ஆய்வு செய்த நாணயவியல் அறிஞர்களில் ஒருசாரார் நாணயங்களில் மீன் சின்னாங்கள் காணப்படுவதால் இவை பாண்டியரால் வெளியிடப்பட்டு தமிழகத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.

இன்னொரு சாரார் இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளமாக இந்நாணயங்களை வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுகின்றனர். வேறு சிலர் வட இலங்கையில் கிடைத்த நாணயங்கள் சமகாலத்தில் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் இருந்து சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பதால் இவற்றைப் பாண்டியர் வட இலங்கைக்கென வெளியிடப்பட்ட தனித்துவமான நாணயங்கள் எனக் கருதுகின்றனர்.

ஆயினும் இக்கருத்துக்கள் பொருத்தப்பாடாகத் தோன்றவில்லை. காரணம் தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் பெரும்பாலும் புழக்கத்தில் இருந்துள்ளதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் வட இலங்கையில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ள மீன் சின்னங்கள் பொறித்த ஒரு நாணயமாவது தமிழக ஆய்வுகளில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை தமிழகத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களாக இருந்தால் வட இலங்கையைக் காட்டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்க வேண்டும். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை பாண்டியர் இலங்கை மீது பல தடவைகள் படையெடுத்ததற்குப் பாளி இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இப்படையெடுப்புக்கள் மூலம் சோழரைப் போல் பாண்டியர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டதற்கு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை. மாறாக இப்படையெடுப்புக்கள் மூலம் இலங்கை மன்னர்களிடம் பாண்டியர் திறை பெற்றதற்கே சான்றுகள் காணப்படுகின்றன.

இதனால் இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளம் இந்நாணயங்கள் வெளியிடப்பட்டவை எனக் கூறுவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. வட இலங்கையில் கிடைத்த மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்கள் தனித்துவமானது என்பதில் நாணயவியல் அறிஞர்களிடையே மாற்றுக் கருத்துக்கள் காணப்படவில்லை. அத்தனித்துவம் பாண்டியருக்குரியதல்ல. மாறாக இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காணப்படும் தனித்துவமான அம்சமாகப் பார்ப்பதே பொருத்தமாகும்.

நானாட்டானில் கிடைத்த நாணய வகைகள் வட இலங்கைக்கு வெளியே மிக அரிதாக தென்னிலங்கையிலும் தமிழகத்திலும் கிடைத்துள்ள நிலையில் வட இலங்கையில் கிடைத்த நாணயங்களின் எண்ணிக்கை பல ஆயிரமாகக் காணப்படுகின்றன. இந்த எண்ணிக்கை யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட சேது மொழி பொறித்த நாணயங்களை விடப் பல மடங்கு அதிகமாக உள்ளன.

இதையே நானாட்டானில் கிடைத்த நாணயங்கள் மேலும் உறுதி செய்கின்றன. இலங்கையில் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றுவதற்கு இந்தியத் தொடர்பு முக்கிய காரணமாக இருந்தாலும் பண்டு தொட்டு இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. தமிழகத்தில் சங்க காலப் பாண்டியர் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களில் முன்பக்கத்தில் நிற்கும் நிலையில் காளையின் உருவமும் நாணயத்தின் பின் பக்கத்தில் பாண்டியரின் அரச இலட்சனையான மீன் சின்னமும் காணப்படுகின்றன.

சம காலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட சதுர நாணயங்களின் முன்பக்கத்தில் பாண்டியர் வெளியிட்ட நாண

(19 ஆம் பக்கம் பார்க்க...)

# பிரதமரின் ஆலோசகராக வைத்தியர் சமன் வீரசிங்க

(கொழும்பு)

பிரதமரின் ஆலோசகராக வைத்தியர் சமன்வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் வியாழக் கிழமை அலரிமாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

இவ்வாறு நியமனம் பெற்றுள்ள வைத்தியர் சமன் வீரசிங்க ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவராக பணியாற்றியுள்ளார்.

அத்துடன், 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி



ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். (ந)

# தனிமைப்படுத்தலிலிருந்து 342 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்த 342 பேர் நேற்று வெள்ளிக்கிழமை அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.


மத்திய நிலையங்களில் இருந்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்த 47 ஆயிரத்து 252 பேர் இதுவரை அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, நாட்டிலுள்ள 79 மத்திய நிலையங்களில் 7 ஆயிரத்து 274 பேர் தொடர்ந்தும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)



# ஆன்மீகம்

## இலக்கு நிச்சயித்து உறுதியாய்ப் பயணிப்போம்



*அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குற்றங்கள் நிகழ்ந்தால் 'சமுதாயத்தில் இதெல்லாம் சகஜம்தான்' என்று நாம் எடுத்துக் கொண்டு ஒருவாறு சமாதானம் அடையலாம். ஆனால், தினசரி நாளேடுகளைப் புரட்டும்போது அது தரும் செய்திகள் நம்மைப் புரட்டிப் போடுகிறதே!*

*"உதயத்தில் செய்தித்தாள் உரைப்பதுவோ எம்மவரின்*
*இதயத் துடிப்பை இரட்டிப்பாய்ச் செய்கிறது!*
*கற்பழிப்பு, கொள்ளை, கலகம், இனச்சண்டை*
*விற்பனையில் பெண்கள், விபரீதக் கொலைகள்"*

*- என்று கவிஞர் ஒருவர் பாடுகிறார். சரி! இப்படி குற்றங்கள் அதிகரிப்பதற்கு என்ன காரணம்? இலட்சியமே இல்லாமல் இந்த மானுட சமூகத்தில் பலர் இருப்பது தான் இந்த வன்முறைகளுக்கெல்லாம் மூல காரணம். வரன்முறை எதுவும் தனக்கென்று வகுத்துக் கொள்ளாதவர்கள் மிருகங்கள் போல் காட்டு மிராண்டிகளாகத்தானே உலாவ முடியும்? இரைக்காகவும், காம இச்சைக்காகவும், சுகபோக வாழ்க்கைக்காகவும் மோசமான குறுக்கு வழிகளைப் பின்பற்றுபவர்கள் தனக்கென்று ஒரு இலட்சியத்தைப் பின்பற்றாதவர்கள் தானே?*

*(தொடரும்...)*

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 110 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 260 | 240 |
| தக்காளி | 200 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 140 | 120 | 120 |
| கரட் | 100 | 180 | 200 | 200 |
| பூசணி | 100 | 120 | 90 | 80 |
| புடோல் | 100 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 180-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 250 | 300 | 250 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 120 |
| பீற்றூட் | 100 | 90 | 100 | 120 |
| கறிமிளகாய் | 280 | 250 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 160 | 150 | 80 |
| போஞ்சி | 300 | 320 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 90 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | --- | --- | --- |
| வெங்காயப்பூ | 250 | 200 | --- | --- |
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | --- | --- | --- |

(18 ஆம் பக்க தொடர்ச்சி)

(மன்னார் நானாட்டானில்...)

யங்களில் உள்ளதைப் போன்றகாளை உருவம் இடம் பெற்றாலும் நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரின் மீன் சின்னத் திற்குப் பதிலாக ஒரு வட்டமும் வட்டத்திற்குள் மூன்று அல்லது நான்கு சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன.

இச்சின்னங்களே சற்றுப் பிற்பட்ட காலத்தில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களின் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. ஆனால் நாணயங்களின் முன் பக்கத்தில் காளைக்குப் பதிலாக சிங்கள மன்னர் வெளியிட்ட நாணயங்களில் சிங்கம் முக்கிய இலட்சனையாக இடம்பெற்றுள்ளது. இவற்றில் இருந்து சிங்கள மன்னர்கள் சிங்கத்தையும் தமிழர்கள் காளையையும் (நந்தி) தமது அரச இலட்சனையாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். இம்மரபு பிற்காலத்திலும் தொடர்ந்துள்ளது. நாணயங்களின் பின்பக்கத்தில் உள்ள சின்னங்களில் காணப்படும் ஒற்றுமை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறித்திருக்கலாம்.கி.பி.6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களில் அவர்களின் அரச இலட்சனையான மீன் சின்னம் கோட்டுருவில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் கிடைத்த சதுர நாணயங்களில் அவை முழு உருவமாகவே பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு வட இலங்கையில் கிடைத்த மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களிலும் காணப்படுகின்றன.

நானாட்டானில் கிடைத்த நாணய வகைக்ளில் மூன்று கோடுகளால் அமைந்த பீடத்தின் மேலேயே நந்தியும் மீன் சின்னங்களும் காணப்படுகின்றன. இந்த அம்சம் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பௌத்த சின்னங்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது இலங்கை நாணய மரபுக்குரிய தனித்துவமான அம்சமாகும். இந்த அம்சத்தை தமிழக நாணயங்களிலோ அல்லது இந்திய நாணயங்களிலோ காணப்படவில்லை. பாண்டியர் இன்னொரு நாட்டை வெற்றி கொண்டு ஆட்சி செய்யும் போது தாம் வெளியிட்ட நாணயங்களில் தமது அரச இலட்சனையான மீனையே பொறித்தனர்.

ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் புதிய அரசைத் தோற்றுவித்த பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் மீனுக்குப் பதிலாக நந்தியையே அரச இலட்சனையாக நாணயங்களிலும் அரச கொடிகளிலும் அரச ஆவணங்களிலும் பயன்படுத்தினர். இதற்கு யாழ்ப்பாண அரசிற்கு முன்னோடியாக நந்தியை அரச இலட்சனையாகக் கொண்ட தமிழ் அரசு வட இலங்கையில் இருந்தது காரணம் எனலாம்.

ஆயினும் யாழ்ப்பாண இராசதானிக்கு முற்பட்ட நாணயங்களில் நந்தியின் வடிவம் மூன்று கோடுகளால் அமைந்த பீடத்திற்கு மேல் காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்களில் பீடத்திற்குப் பதிலாக சேது என்ற மங்கல மொழி பொறிக்கப்பட்டுள்ளது.இதன்மூலம் யாழ்ப்பாண இராசதானியை முதலில் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் தமிழ் நாடு இராமேஸ்வரம் சேது தலக்துடன் தமக்குள்ள தொடர்பை அடையாளப்படுத்திக் கொண்டனர் எனக் கூறலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொலநறுவை இராசதானியில் கலிங்கமாகன் ஆட்சியால் வெறுப்படைந்த சிங்கள மக்களும் சிங்கள அரசும் தெற்கு நோக்கி நகர்ந்த போது வடக்கே தமிழருக்குச் சார்பான அரசு கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தோன்றியதாகப் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன.


இவ்வரசின் படைகள், பாதுகாப்பு அரண்கள் திருகோணமலை, கந்தளாய், பதவியா, குருந்தன் குளம், கோணாவில், மன்னார், மாதோட்டம், இலுப்பைக்கடவை, காக்கதீவு, ஊர்காவற்றுறை, வலிகாமம் முதலான இடங்களில் நிலை கொண்டிருந்ததாக இவ்விலக்கியங்கள் மேலும் கூறுகின்றன. இதைச் சமகாலத்திற்குரிய பாண்டியரது கல்வெட்டும் உறுதி செய்கின்றது.

இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது மன்னார் நானாட்டானிலும், வட இலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களை யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடியாக வட இலங்கையில் நந்தியை அரச இலட்சனையாகக் கொண்டு ஆட்சி புரிந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டவை எனக் கூறுவதே பொருத்தமாகும்.

முற்றும்




# பலம் எது? பலவீனம் எது?



ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன.

அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை பார்த்து பொறாமைப்பட்டுக் கொண்டேயிருந்தது.

உதாரணத்திற்கு யானையைப் பார்த்து பெரிய தாய் இருக்கிறது என்றும், மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப்படும்.

இப்படியிருக்க ஒரு மழை காலத்தில் அந்த மயில் அழகாக ஆடத் தொடங்கியது. அப்போது பாட ஆரம்பித்த மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத் தொடங்கியது.

அப்போது அங்கு வந்த மைனா மயிலை சமாதானப்படுத்தி அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூற, மைனா மயிலிடம், நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், அதை நினைத்து நீ சந்தோஷப்பட்டிருக்கிறாயா? என்றது.

மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு இல்லை என்று பதில் கூறியது. இதனை கேட்டு சிரித்த மைனா உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு சிறப்பும் வலிமையும் இருக்கும்.

அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்தவேண்டுமே அன்றி எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ பொறாமைப்படவோ கூடாது என அறிவுரை கூறியது.

தன் தவறை உணர்ந்த மயில் மைனாவிற்கு நன்றி தெரிவித்தது.

## வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

# மருத்துவப் பழமொழிகள்

- பொன்னை எறிந்தாலும் பொடிக்கீரையை எறியாதே
- காட்டில் கொல்லுவது புலி, வீட்டில் கொல்லுவது புளி
- நீர் சுருக்கி, மோர் பெருக்கி, நெய் உருக்கி உண்பவர் தம் பேருரைக்கிற் போமே பிணி
- கறிவேப்பிலையோ வேப்பிலை காய்கறிக்கெல்லாம் தாய்ப்பிள்ளை
- காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் மண்டலம் உண்ண கோலையூன்றிக் குறுகி நடப்பவர் கோலை விட்டு குலவி நடப்பாரே
- காலில் மிதிபடும் செடிகள்- வரும் காலனை எதிர்த்திடும் வெடிகள்
- அரவந் தீண்டில் அழஞ்சி வேர்ப்பட்டையிடு
- கிராணிக் கழிச்சலுக்கு இடு மாதுளம் பிஞ்சு
- கோளையை யிளக்குங் குப்பை மேனிச்சாறு
- வெங்காயம் உண்போர்க்குத் தங்காயம் பழுதில்லை
- கிழங்குகளில் கருணையின்றி வேறொன்றும் புசியோம்
- தேற்றாங் கொட்டையிட்டுத் தேற்றுக மைந்தரை
- தண்ணீர் முட்டானைக் கிழங்கு தழுவப் பால் சுரக்கும்
- கேசத்தை வளர்த்திடும் மருதோன்றி- நற் செரிமானம் உண்டாக்கும் வெற்றிலை
- குடல் புண்ணை ஆற்றிடும் குணமுண்டு- அது மணத் தக்காளி எனும் கீரைக்குத் தான்
- சிறுநீரைப் பெருக்கிடும் சிறு கீரைக்கு கால் வீக்கத்தை வாங்கிடும் சக்தியுண்டு
- வெள்ளைப் பூண்டு பத்துத் தாய்க்குச் சமம் (தொடரும்)

தொகுப்பு: புத்தூர் பொது நூல் நிலையம்

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்




நெல் அளக்கும் அளவை முறைகள்

தொழிலாளர்களின் அன்றாடக் கூலிகள் எப்படி இருந்தன? அப்போது பணத்திற்குப் பதிலாகப் பொருட்களைச் சம்பளமாக வழங்கினார்கள். ஒரு தோட்டக்காரருக்கு நாள் ஒன்றுக்கு ஆறு நாழி நெல்லும் (நாழி என்பது கால்படி அளவு) ஆண்டொன்றுக்கு அரை கழஞ்சு பொன்னும் தரப்பட்டது.

இரண்டரை அடி ஆழமுள்ள 50 குழிகளை வெட்டுபவர்களுக்கு ஒரு காசு கூலியாக்த் தரப்பட்டிருக்கிறது.

அதேசமயம் ஊர்ச்பையைக் கூட்டுவதற்காகக் கொம்பு ஊதுபவருக்கு நாள்தோறும் இரண்டு வேளை உணவு வழங்கப்பட்டது. அதிகக்கூலி கேட்டால் கடையில் இருந்து சில பொருட்கள் வாங்கித் தரப்பட்டன.

தோட்டத் தொழிலாளி நாள் ஒன்றுக்கு 10 நாழி நெல் கூலி. மரம் வெட்டுபவருக்கும் சமையல் வேலைக்கும் ஒருநாள் கூலி 4 நாழி நெல்.

பல்லக்கு தூக்குபவர்களுக்கு நாலு நாழி நெல் ஊதியம். தோட்ட வேலை செய்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 நாழி நெல்.

ஆனால் தொழில் நுட்பம் சார்ந்த வேலை தெரிந்தவர்களுக்கும் அதிக திறமையுடையவர்களுக்கும் சம்பளம் அதிகமாக இருந்தது. விசேட கூத்து நடத்துபவர்கள் ஒரு கூத்துக்கு 2 கலம் நெல் வீதம் சம்பளம் பெற்றனர்.

ஓராண்டில் குறைந்தது ஏழிலிருந்து பத்து கூத்துக்கள் நடக்கும். பெரிய கோயிலில் பணியாற்றிய ஆடல் மகளிருக்கு ஒரு வீடும் ஆண்டு ஒன்றுக்கு 100 கலம் நெல்லும் வழங்கப்பட்டன.

திருப்பதிகம் பாடிய 50• பேருக்கு 3 குறுணி நெல் வழங்க ராஜராஜன் உத்தரவிட்டார். கோயில் கணக்கனுக்கு வருடத்துக்கு 200 கலம் நெல் வழங்கப்பட்டிருக்கிறது.

சோழர் காலத்தில் நாணயங்கள் வந்துவிட்டாலும் பண்டமாற்று முறைகள் பின்பற்றப் பட்டன. 9 குறுணி நெய், ஒரு கழஞ்சு பொன்னுக்குச் சமமாக இருந்த காலகட்டம் அது.

ஒரு நாழி நெல்லுக்கு ஒன்றரை நாழி தயிர் மாற்றிக் கொள்ளப்பட்டது. ஒரு கழஞ்சு பொன்னுக்கு 7 கலம் நெல் விற்கப்பட்டது.

நெல் முக்கிய தானியமாக இருந்திருக்கிறது. விளைச்சலைப் பொறுத்து நெல்லின் விலை தீர்மானிக்கப்பட்டது. ஒரு கழஞ்சு பொன்னுக்கு 13 கலம் நெய் விற்கப்பட்டுள்ளது. கி.பி. 1006 இல் ஒருகாசுக்கு 8 கலம் நெல் விற்கப்பட்டது.

(தொடரும்)

நேரத்தை தள்ளிப் போடாதீர்கள். தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐ.நா சபையின் கவலையும் கண்டனமும் மனித உரிமைகளை பாதுகாக்குமா?

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதாக ஐ.நா பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்வது தமக்குக் கவலை தருவதாகக் குறிப்பிட்டுள்ளதுடன் சிவில் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நீதி கோரிப் போராடுபவர்களை அரச புலனாய்வாளர்கள் கண்காணித்து வருவதாகவும் ஐ.நா பொதுச் செயலாளர் தனது அறிக்கையில் விதந்துரைத்துள்ளார்.

ஐ.நா பொதுச் செயலாளர் விடுத்த அறிக்கை மட்டும் இலங்கையில் மனித உரிமைகளை நிலைநிறுத்துமா? அல்லது பாதுகாக்குமா? என்றால் அதற்கான பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

அப்படியானால், ஐ.நா சபை கவலையும் கண்டனமும் வெளியிடுகின்ற அமைப்பாக இருந்து கொண்டு எதனைத்தான் செய்யப் போகிறது என்பதுதான் நம் கேள்வி.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் அடக்குமுறைக்கு உட்படுகின்றனர்.

தவிர, காலத்துக்குக் காலம் கோரதாண்டவம் ஆடும் பேரினவாதத் தீக்கு இரையாகின்ற தமிழ் மக்கள் பல்லாயிரம்.

இருந்தும் இதுவரை ஈழத் தமிழர்களின் விடயத்தில் ஐ.நா சபை காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தம் நடந்ததாயினும் அப்போதெல்லாம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா சபை கவலை வெளியிட்டதேயன்றி, அதனைத் தாண்டி எதையும் செய்யவில்லை.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடர் நடந்தபோது, பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு மறுத்த இலங்கை அரசு; ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடனான இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருந்தது.

இவ்வாறாக ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கயிறு விடுகின்ற இலங்கை ஆட்சியாளர்களிடம் மனித உரிமை மீறல் தொடர்பில் ஐ.நா செயலாளரின் கவலைகள் எந்தப் பயனையும் தரப்போவதில்லை என்பது மட்டும் சர்வநிச்சயம்.

# நாமலை ஜனாதிபதியாக்கும் நாடகத்திற்கான மேடையே 20 ஆவது திருத்தம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை ஜனா திபதி வேட்பாளராக நிறுத்த திட்டங்கள் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவை அடுத்து ஜனாதிபதியாக்கும் நாடகத்துக்கான ஒருமேடை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப் படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாகச் செயற்படும் எனவும் 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒருமித்து முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

அரசாங்கம் எதைச் செய்தாலும் பாராளுமன்றத்தில் ஒருமித்த கருத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

தாங்கள் விரும்பியதைச் செய்ய முயற்சிக்கக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# அர்ஜுன ரணதுங்க நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதற்காக முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை கைது செய்வதற்கான உத்தரவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் மீளப் பெற்றுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு தலைமை நீதிபதி மொஹமட் மிஹைர் பிறப்பித்தார். சிறிது நேரத்தில் மீளப் பெறப்பட்டது.

2018 ஒக்டோபர் 28 இல் இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பான வழக்கில், முன்னாள் கொழும்பு மாநகரசபை ஆணையாளர், குலதிஸ்ஸ கீக்கியானகே உள்ளிட்ட பத்து பேர் பிரதிவாதி களாக பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, வழக்கின் முதல் சாட்சியாக பெயரிடப்பட்ட முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதையடுத்து இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், குறித்த வழக்கு டிசெம்பர் 18 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. உரிய திகதியில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த சம்பவத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், 34 வயது நபர் ஒருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கொள்ளைச் சம்பவம்; ஐவர் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு கட்டானையில் 30 மில்லியன் ரூபா கொள்ளை சம்பவம் தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமையன்று இந்த ஐவரும் கட்டான பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து 30 மில்லியன் ரூபாவைக் கொள்ளை யிட்டு சென்ற நிலையில் குறித்த ஐந்து பேரும் குருநாகல், தம்புத்தேகம, நிக்கவரெட்டிய மற்றும் கம்பஹா பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர்.

அவர்களிடமிருந்து 7.2 மில்லியன் ரூபாவும், தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## சிரமதானம்

(சாவகச்சேரி)

'விதையனைத்தும் விருட்சமே' அமைப்பின் பிளாஸ்ரிக் அற்ற யாழ். நோக்கிய தொடர் செயற்றிட்டத்தில் பிளாஸ்ரிக் அகற்றல் செயற்றிட்டமானது இன்று 3 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி குருவிக்காட்டுப் பகுதியில் இடம்பெறும். இச்சூழல் நேயப் பணிக்கு சமூக சேவையாளர்கள், விழிப்புணர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-104)

## திருவள்ளுவரின் நாவிலிருந்து

### நல்லவர்களுடன் சேருங்கள்



தான் சேர்ந்திருக்கும் நிலத்தின் தன்மைக் கேற்ப மணம், சுவை, நிறம் ஆகிய தன்மைகளை தண்ணீர் பெறுகிறது. அசுத்த நீருடன் சேரும்போது, அது அசுத்தமாகிறது. அதேபோல, உடன் பழகுபவர்களின் தன்மைக்கேற்பவே குணங்களும் அமையும். தீயவர்களுடன் சேர்வதால் தீமை உண்டாகுமே தவிர, வேறு நன்மைகள் ஏதும் ஏற்படாது. நல்ல குணமுடையவர்கள், தீயோர்களுடன் நட்பு கொள்ளாமல் விலகியே இருப்பர்.

ஒருவனுக்கு அமையும் நட்பைப் பொறுத்தே, அவனுக்கு அறிவும், நடத்தைகளும் அமைகிறது. நல்லவர்களுடன் சேர்வதால் மனம் சுத்தமாகவும், செயல்கள் நல்லதாகவும் இருக்கும். ஒருவன் தான் செய்த நற்செயல்களால் மட்டுமே இறந்த பின்பும் புகழ்பெற்றிருக்க முடியும். அப்படிபட்ட செயல்கள் பெற நல்ல குணமும், நல்லோர்களின் நட்பும் அவசியம் வேண்டும்.

ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு நல்லவர் சேர்க்கையை விட, வேறு எதுவும் உதவி செய்யாது. அதேபோல், தீயவழியில் ஈடுபட்டு வீணாக வாழ்ந்து துன்பத்தில் வீழ்வதற்கு, தீயவர் சேர்க்கையைவிட வேறு எதுவும் துணையாக இருக்காது.

ஒரு செயலை செய்யும் முன், அதற்கு வரும் இடையூறுகள், விளையும் பயன், தேவையான பொருள், கருவி, காலம், ஆற்றல், இடம் போன்ற வற்றை நன்கு சிந்தித்துவிட்டு அதில் இறங்க வேண்டும். இந்த குண்ங்கள் நல்ல நண்பர்களின் நட்பினாலேயே வரும். செயலை செய்யத் தொடங்கியவுடன் பார்த்துக் கொள்ளலாம் என்பது முட்டாள்தனம்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### விவேக சிந்தனைகள்



நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன். எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன். மற்றவர்கள் துர் ஆத் மாக்கள்.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள். கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தி யாக வேண்டும். இது சுறுசுறுப்பு என்புதற்கு எதிர்ப்பு என்பது பொருள். நமது நாடு வீரர் களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள். தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.

அளவற்ற பலமும் பெண்ணைப்போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன். இளைஞர்களே தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தை கிளப்புவதற்கு உங்கள் தோள்க ளைக் கொடுங்கள். ஓ சிங்கங்களே! நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய் யுங்கள். உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப்பெரிய பாவம். என் குழந் தை களான நீங்கள் என்னை விட நூறு மடங்கு சிறந் தவர்களாக இருக்கவேண்டும் என்று நான் விரும்பு கின்றேன்.

# களத்தில் ஆட்டம் காட்டிய பொலார்ட் - ஹர்திக்



# மும்பையிடம் மண்டியிட்டது பஞ்சாப்

ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 13வது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. டொஸ் வென்ற பஞ்சாப் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி மும்பை இந்தியன்ஸ் அணியின் குயின்டான் டி கொக், ரோகித் சர்மா தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே காட்ரெல் வீசிய பந்தில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் குவிண்டன் டி கொக் ஆட்டமிழுந்தார்.

அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் 10 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார். ஒரு பக்கம் விக்கெட் வீழ்ந்தாலும் மறு முனையில் ரோகித் சர்மா சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார். இஷான் கிஷன் 28 ஓட்டத்துடன் வெளியேறினார்.




அடுத்து களமிறங்கிய பொலா ர்ட் ரோகித் சர்மாவுடன் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினார்.

45 பந்தில் 70 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரோகித் சர்மா ஆட்டமிழந்தார்.

5வது விக்கெட்டுக்கு பொலார்ட் உடன் ஹர்திக் பாண்ட்யா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ருத்ர தாண்டவம் ஆடியது.

17 ஓவரில் 129 ஓட்டங்கள் எடுத்திருந்த மும்பை அணி ஹர்திக், பொல்லார்டு ஜோடியின் அதிரடியால் 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்களை குவித்தது.

20 பந்தில் 3 பவுண்டரி, 4 சிக்சர் உட்பட 47 ஓட்டங்களுடன் பொலார்ட், 11 பந்தில் 3 பவுண்டரி 2 சிக்சர் உட்பட 30 ஓட்டங்களுடன் ஹர்திக் பாண்ட்யாவும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து, 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணியின் தலைவர் கே.எல்.ராகுல் மற்றும் மயங்க் அகர்வால் ஆகியோர் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். 18 பந்தில் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பும்ரா பந்து வீச்சில் மயங்க் அகர்வால் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த கருண் நாயர் 3 பந்துகளை சந்தித்து குர்னால் பாண்ட்யா பந்துவீச்சில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார்.

17 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் பஞ்சாப் கப்டன் கே.எல்.ராகுல் மும்பை வீரர் ராகுல் சாஹர் பந்துவீச்சில் வெளியேறினார். சற்று நிலைத்து நின்று ஆடிய நிக்கோலஸ் பூரன் 27 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட 44 ஓட்டங்கள் குவித்து பட்டிசன் பந்துவீச்சில் வெளியேறினார்.

ஆனால், மற்ற வீரர்கள் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழுந்து வெளியேறினர்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்த பஞ்சாப் அணி 143 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றது.

இதனால், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது. (4)

# 5000 ஓட்டங்களை கடந்து ரோஹித் சர்மா சாதனை

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விராட் கோலி, சுரேஷ் ரெய்னா ஆகியோருக்குப் பின் 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்து ரோஹித் சர்மா சாதனை படைத்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் அபுதாபியில் நடைபெற்றது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரோஹித் சர்மா தான் சந்தித்த முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். 2 ஓட்டங்கள் அடித்தால் 5 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டுவார் என்ற நிலையில், பவுண்டரி அடித்து இல க்கை எட்டினார். இதன்மூலம் ஐபிஎல் கிரிக் கெட்டில் 5,000 ஓட்டங்களை கடந்த 3வது வீரர் என்ற சாதனையை படைத்தார்.

விராட் கோலி 5,430 ஓட்டங்களுடன் முதல் இடத்திலும், 5,368 ஓட்டங்களுடன் சுரேஷ் ரெய்னா 2வது இடத்திலும் உள்ளனர்.(4)



**கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கற்பகசுமர் உதைபந்தாட்ட தொடர் கடந்த 30 ஆம் திகதி கிராஞ்சி செல்சிற்றி மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியில் பாடும் மீன் அணி கிளிநொச்சி ஜெயந்திநகர் அணியை 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி போட்டிக்கு தகுதிபெற்றது.** (படம்- ஏனஸ்ற்)

# நொதேன் பிறீமியர் லீக் - 2K20

## கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்




- வட ஸ்ரைக்கேர்ஸ் எதிர் ஊரெழு றோயல்ஸ்
- ஊரெழு றோயல்ஸ்-68/8
- வட ஸ்ரைக்கேர்ஸ் -69/1
- ஆட்ட நாயகன் ரஜீபன்- 33 ஓட்டங்கள்



- சங்கானை றொப் 11 எதிர் கிங் கோப்ராஸ் ஜெப்னா
- கிங் கோப்ராஸ் -74/5
- சங்கானை றொப்11-75/7
- ஆட்டநாயகன் சூர்யா- 29 ஓட்டங்கள்




- நொதேன் கிளப் எதிர் வட ஸ்ரைக்கேர்ஸ்
- நோ நேம் -92/7
- வட ஸ்ரைக்கேர்ஸ்-95/8
- ஆட்டநாயகன் சேந்திரன் 27 ஓட்டங்கள்



- கொக்குவில் ஸ்ராஸ் எதிர் சங்கானை றொப் 11
- கொக்குவில்ஸ்ராஸ்-92/6
- சங்கானை றொப்11- 68/8
- ஆட்ட நாயகன் சுயேந்திரன் 5 விக்கெட்டுக்கள்

## ட்ரம்புக்கு...

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும், அவரது மனைவி மெலனியா ட்ரம்புக்கும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ட்ரம்பின் நெருங்கிய ஆலோசகரான 31 வயதான ஹோப் ஹிக்ஸ்க்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட தனையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப் பட்டிருந்த நிலையில், தற்போது தமக்கும் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள தாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் டுவிட் செய்துள்ளார்.

மேலும், தொற்று உறுதிசெய்யப்பட் டதையடுத்து தாங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் அந்த டுவிட் பதி வில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர் தலுக்காக ட்ரம்ப் பிரசாரத்தில் ஈடுபட்டுள் ளார்.

இதற்காக பல்வேறு இடங்களுக்கு ட்ரம்ப் பயணம் மேற்கொண்டு வரும் நிலையில், அவருடன் ஆலோசகர் ஹிக் ஸும் சென்று வந்துள்ளார்.

அத்துடன் புதன்கிழமை நடந்த பிரசார பேரணியின்போதும் ஹிக்ஸ் ட்ரம்புடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தமிழரசுக் கட்சி...

கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி. துரைராஜசிங்கம் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்ததையடுத்து பொதுச் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப் பட்டு வந்தது.

இந்நிலையில் கட்சியின் செயற்பாடு களை முன்னெடுத்து செல்வதற்காக கட்சி மட்டத்தில் பொதுச் செயலாளரொருவரை நியமிக்கும் பொருட்டு துணைத் தலைவர் களாக செயற்பட்டு வந்த வைத்திய கலா நிதி ப.சத்தியலிங்கம் மற்றும் எம்.ஏ.சுமந் திரன் ஆகியோரில் ஒருவரை பொதுச் செய லாளராக நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருந் தது.

இதன் பிரகாரம் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை கூடும் வரையிலும் துணைத் தலைவராக செயற்பட்டு வந்த ப.சத்திய லிங்கம் பொதுச் செயலாளராக செயற்படும் வகையில் அவர் தெரிவு செய்யப்பட்டுள் ளார். (ம-3,299)

## வடக்கு - கிழக்கில்...

தத்தின் இன்றைய நிலையும் இந்தியா வின் பங்கும் என்ற தலைப்பில் தமிழக பா.ஜ.க துணைத் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் மற்றும் ஓய்வுபெற்ற இந்திய வெளிநாட்டு சேவைகள் அதிகாரி நடராஜன் ஆகியோருடன் காணொளி உரையாடல் ஒன்றில் வரும் ஞாயிறன்று நீங்கள் ஈடுபட போவதாக அறிந்தோம்.

இந்த உரையாடலில் நீங்கள் கலந்து கொள்வதன் மூலம் 13ஆவது அரசியல மைப்பு திருத்தச் சட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டீர்கள் என்பதாகுமா? 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை பிரத மர் மகிந்த ராஜபக்ஷவுக்கு கூறியிருப் பதன் பின்னணியிலா இந்த நிகழ்வு நடை பெறுகின்றது?

**பதில்:** இவ்வாறு பலர் எனது மின் னஞ்சலுக்கு கேள்விகள் கேட்டு அனுப்பி இருக்கிறார்கள். இதற்கு எனது பதிலை மிகவும் சுருக்கமாக நான் கூறுகின்றேன்.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எனது கருத்துக்களை கூற முடியுமா என்று திரு மதி வானதி சீனிவாசன் சார்பாக என்னி டம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தற் போது 13 ஆவது திருத்தச் சட்டம் முக்கிய ஒரு பேசுபொருளாக இருப்பதால், இந்த நிகழ்வில் கலந்துகொண்டு 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிய எனது அனுபவங் களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வது எனது கடமை என்றும் அதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் நான் கருதி கலந்துகொள்ள சம்மதித்தேன்.

இந்த நிகழ்வுக்கும் இந்திய பிரதமர் மோடி 13 ஆவது திருத்த சட்டம் பற்றி பிரத மர் ராஜபக்ஷடம் வலியுறுத்தி யதற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

ஆனால் ஒரு விடயத்தில் நான் தெளி வாக இருக்கின்றேன். இலங்கையில் தமிழ் மக்கள் சமஷ்டி அடிப்படையில் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு இந்தியா வின் உதவியும் ஒத்தாசையும் எமக்கு மிக வும் அவசியம். இதற்கு இந்தியாவுடனான தமிழ் மக்களின் சுமுக உறவு அவசியம். இந்தியாவுடன் நாம் பேச்சு வார்த்தை களில் ஈடுபடவேண்டும்.

ஆனால், இந்தியாவுடனான எமது அணுகுமுறை தனி ஒரு நபர் சார்ந்தோ அல்லது தனி ஒரு கட்சி சார்ந்தோ இருக்க முடியாது. இருக்கக்கூடாது.

எனினும் இந்தியப் பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கமும் தற் போதுள்ள இந்தியக் கொள்ளை வகுப் பாளர்களும் இவற்றை நன்கு புரிந்து உரிய முறையில் காய்களை நகர்த்துவார் கள் என்றே நான் நம்புகின்றேன்.

தற்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்ஷங்கர் இலங்கை விடயத்தில் நீண்ட அனுபவ முடையவராகவும் சர்வதேச அரசியலில் மிகச் சிறந்த ராஜதந்திரியாகவும் காணப் படுகின்றார். அவர் எமது பிரச்சினையை திறம்பட கையாள்வார் என்பது எனது எதிர் பார்ப்பு.

ஆனால் இலங்கை அரசாங்கம் சார் பானவர்கள் மாகாண சபைகளை உடனே நீக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்து வருகின்றார்கள். வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் மாகாண சபைகளை நீக்குவதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது.

எம்மைப் பொறுத்த வரையில் முழுமை யான சமஷ்டி முறையிலான பொறிமுறை யொன்று வடக்கு - கிழக்கில் நிறுவப்படும் வரை வடக்கு - கிழக்கு மாகாண சபைகளை நீக்குவது தற்கொலைக்கு சமமாகும். இவ் வாறான கருத்துக்களை எல்லாம் இந்தியா விற்கு தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு எனக்குள்ளது. இச்சந்தர்ப்பத்தை அதற்காக நான் பயன்படுத்துகின்றேன் என்றார்.(ம-3)

## மதுச்சாலைகள்...

பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் 56 மது வரித் திணைக்கள அலுவலகங்களின் கீழ் 900 உத்தியோகத்தர்களை கடமை யில் ஈடுபடுத்தி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழரைப் பொறு...

உயிர் நீத்தார் எனக் கருதுகின்றார்கள்." இவ்வாறு வெகுஜன ஊடகத்துறை அமைச் சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு முகத்தில் அறைந்தால் போல் நேரில் தெரிவித்தார் யாழ். ஊடகவியலாளர் ஒருவர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப் பில் இந்தப் பரபரப் புச் சம்பவம் நடந் தது.

இதன் போது, செய்தியாளர் ஒரு வர் தியாகி திலீபன் நினைவேந்தல் தடை குறித்து கேள்வியெழுப் பினார்.

அதற்குப் பதி லளித்த ஹெகலிய எகத்தாளமாகப் பதி லளித்தார்.

"திலீபன் ஒரு பயங்கரவாதி. அவரை நினைவு கூர அனுமதிக்க முடியாது. பின்லே டனை நினைவு கூர அமெரிக்கா அனுமதிக்கின் றதா? இல்லையே. அது போல்தான் திலீபனும் ஒரு பயங்கரவாதி. அவரை நினைவு கூர அனுமதிக்க முடியாது.

இன்று திலீ பனை நினைவு கூரக் கேட்பார்கள். நாளைக்கு "எக்ஸ்" ஐ நினைவு கூர, "வை"யை நினைவு கூரக் கேட்பார்கள். அதற்கு அனுமதி க்க முடியாது என் றார்.

இதன்போது, எழுந்த செய்தியாளர் ஒரு வர் "தியாகி திலீபன் உங்களிற்கு வேண்டு மானால் பயங்கரவாதியாக இருக்கலாம்.

ஆனால், எம்மை பொறுத்தவரை- தமிழ் மக்களிற்கு அவர் தியாகி. தமிழ் மக்களிற்காகவே அவர் போராடி உயிர் நீத்ததாக கருதுகிறார்கள்" என்றார்.

இதை மொழிபெயர்ப்பாளர் மொழி பெயர்த்துச் சொன்னபோது, "இது அவரது கருத்து" என்று ஹெகலிய கூறிவிட்டு "கப்சிப்" பாக இருந்து விட்டார். (ம-3.6)

## மூவின மக்களை...

ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

நாடளாவிய ரீதியில் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைபுக்கு எதி ராக இடம்பெறும் போராட்டங்களில் ராஜ பக்ஷ அரசுக்கு எதிரான அனைத்துக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புகளும் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தப் போராட்டங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவின மக்களும் கட்சி பேதமின்றி அணிதிரள வேண்டும்.

நாட்டில் ஜனநாயகத்தை விரும்பும் சகல தரப்புகளும் இந்தப் போராட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற அதிகாரத் திமிருடன் இந்த அரசு செயற் படுகின்றது. இதற்கு நாட்டு மக்கள்தான் வீதியில் இறங்கி முடிவுகட்ட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## திங்கள் மீண்டும்...

கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய மற்றும் நீதிபதிகள் 24


தன நிதானய
திகதி - 2020.10.02
சீட்டிழுப்பு இலக்கம் - 323
M 12 43 69 73
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 02/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0630
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
E 05 37 38 56 58

நீரோகா
திகதி 02/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0708
லக்கினம் | வெற்றி இலக்கங்கள்
தனுசு 18 27 28 59

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 02-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2558
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
D 36 49 61 65

மஹஜன சம்பத
திகதி 2020/10/02
சீட்டிழுப்பு இலக்கம் 4263
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
H 9 6 3 0 1 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1233 | நிறம் இளம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 02.10.2020 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
R 24 35 60 73
51,631,303.20
SUPER 500 2 6 2 8

F 01 13 41 60
632
பச்சை
02.10 2020
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,135,755
Web: www.dlb.lk

ராசி
திகதி 02/10/2020 | வெற்றி வாரம் 2940
சுப்பர் ஜக்பொட் ரூ. 32,53,716 | வர்ணம் இருண்ட நீலம்
வெற்றி இலக்கங்கள்
02 09 29 36
ரூ.500 பரிசுக்குரிய 7274
ரூ.100 பரிசுக்குரிய 545
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,503,120

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1059
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.10.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,878,945/-
வெற்றி இலக்கங்கள்
33 34 42 43 Z
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9333
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 564
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.02
சீட்டிழுப்பு இல: 3389
வர்ணம் : ஆரஞ்சு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,731,958.90
வெற்றி இலக்கங்கள்
13 32 48 52 E
ரூ.500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2934
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

### (அன்பொளி கல்வியகம்)

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2021**

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

அனுமதிகளை 04.10.2020 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 09.10.2020 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு :-** பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

(C-455)

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். — இயக்குநர்

**ICT SERVICE OPEN / LIMITED**

பரீட்சைக்கான வகுப்புக்கள்

ஆரம்பம் ஞாயிறு 04.10.2020 காலை 9.00 மணி (4359)

Open University LLB Entrance Exam வகுப்புக்கள்
பிரிவு - I சனி, ஞாயிறு
பிரிவு - II திங்கள், புதன் (மாலை)

MSO வகுப்புக்கள்
பிரிவு - I சனி, ஞாயிறு
பிரிவு - II திங்கள், புதன் (மாலை)

**AMC ACADAMY**
BMC LANE, JAFFNA.
077 6944 543


## திங்கள் மீண்டும்...

புவனேக அலுவிஹர, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜெயவர்தன மற்றும் விஜித் மலல்கொட தலைமையிலான ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் முன், காலை 9 மணி முதல் விசாரிக்கப்படும்.

37 மனுதாரர்கள் மற்றும் அனைத்து இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள், கடந்த 3 நாட்களில் சமர்ப்பணம் செய்துள்ளனர். (ம-03)

## இருவேறு...

தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மகன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மகனும் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் தேராவில் விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய செல்வம் அஜந்தன் என்ற மாணவனே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிந்தவராவார்.

இதேவேளை கடந்த 27ஆம் திகதி ஏ35 பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் துவிச்சக்கரவண்டியில் தோட்டத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த முதியவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை குறித்த முதியவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான முத்தையா செல்வரட்ணம் (வயது - 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

குறித்த இருவரின் உயிரிழப்புகள் தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


### காணி விற்பனைக்கு

முதலியார் வீதி, பூதர் மடத்தடி, கோப்பாயில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஒவ்வொரு பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
**பரப்பு 5 லட்சம்.**
பருத்தித்துறை வீதியில் இருந்து 120 m தொலைவில் உள்ளது.
**தரகர் தேவையில்லை.** (4351)
077 468 3354 / 076 221 2037

### வாகனம் தேவை

மிகவும் நல்ல நிலையில் உள்ள ஆங்கில இலக்கமுடைய ( 4 door ) Flat roof Noah (KR 42 ) அல்லது (CR 27 ) Lotto உடன் தேவை. தரகர்கள் தேவை இல்லை. (4355)
075 815 2778

## Techno World
### தொழில்நுட்பக் கல்லூரி

**A/L தொழில்நுட்ப பிரிவு 2022**

பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்

## புதிய பிரிவு ஆரம்பம்

**10.10.2020 காலை 08.00 மணிக்கு**

(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்) (C-456)

**AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பபிரிவு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா**

கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October 19,20,21

- ஆராய்ச்சி நிலையம்,
- பண்ணை (New Zealand Farm),
- Tissue Culture Lab,
- Automobile lab பார்வையிடப்படும்.

தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549

## உடனடி வேலைவாய்ப்பு

01- Video editor (Adobe Premiere)
02- News editors (Website Update)
03- Social Media Updaters
04- News Presenter
05- VJ
(4357)

☎ - 077 009 9248
✉ - mediatamil149@gmail.com

### வேலை ஆட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு. வேகமாக பாசல் கட்டக் கூடியவர்கள் தேவை.
வயது ( 18 தொடக்கம் 35 வரை ) (4358)
076 878 3734
077 717 1545


## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலெட்சுமி தருமலிங்கம் (மணி)



யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விஜயலெட்சுமி தருமலிங்கம் (மணி) கடந்த 30.09.2020 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் பொன்னையா - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் ஆருயிர் மனைவியும் ரமேசன், ரஜனி, சபேசன், மகேசன், ரமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தில்லைநேசன், மஞ்சுளா, சர்மிளா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான உமாபதி, உலகேஸ்வரி, கிருஷ்ணா மற்றும் காந்தமலர், நடனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், பரம்சோதி, நாகம்மா, அம்பிகாவதி, பாலகிருஷ்ணன் (பாலு), துரைரெட்ணம் (சாமி), வசந்தமலர் மற்றும் சுகிர்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான புஸ்பலதா, அருளானந்தம், வினாயகரெட்ணம், சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் அசோக்ரமணா, பிருத்வி, ஹரணி, அஷானி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் சந்தோஷ், மகிஷா, ஆத்மிகன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஸ்ரீபத்மராஜா, ஸ்ரீபத்மினி, ஸ்ரீரவீந்திரராஜா, சாந்தினி, றோகினி, நந்தினி, நளாயினி, இளங்கோ, சுலோஜினி, வினோதினி ஆகியோரின் சிறிய தாயாரும் கல்யாணி, சகிதரா ஆகியோரின் சின்ன அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2020) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-464)

சபேசன் - மகன் 0019057510818
0016474449284
ரமணி சிவகுமார் - மகள் 0016479684717
ரமேசன் - மகன் 004917628444185
ரஜனி தில்லைநேசன் - மகள் 0094769270182
மகேசன் - மகன் 00491772045488

இல. 02, 47ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.

தகவல்:-
மகள் - ரஜனி தில்லைநேசன்


### காணி விற்பனைக்கு

நெடுங்குளம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(ஒவ்வொரு பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.)
**தரகர் தேவையில்லை.** (4351)
077 468 3354 / 076 221 2037

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆறுகால் மடத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(ஒவ்வொரு பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.)
**தரகர் தேவையில்லை.** (4348)
077 468 3354 / 076 221 2037

### பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-308)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
✆ 0768226243
v2vacancies@gmail.com

### வீடு தேவை

அச்சுவேலி, உரும்பிராய், சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு உட்பட்ட பகுதியில் 5 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு வாடகைக்குத் தேவை. (4352)
076 769 9191 / 077 444 1859

### அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பம் 08-10-2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (C-308)
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
✆ 0768226244

### விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-1025/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg (C-308)

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

DHL
✆ 0768226240

## கனடாவில் வேலைவாய்ப்பு/கல்வி கருத்தரங்கு

குறைந்த செலவில் ஒரு பராமரிப்பாளராக குடும்பத்துடன் கனடாவில் நிரந்தர பிரஜை ஆகுவதற்கான வாய்ப்புக்கள்

- செலவு குறைத்து கனடா செல்வதற்கான வழிமுறைகள்
- பல்வேறு விசா நடைமுறைகள்
- புதிய குடிவரவு திட்டங்கள்
- பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது கனடிய குடிவரவு அனுகூலங்கள்
- O/L உடன் கனடாவில் கல்வியினை தொடரக்கூடிய வாய்ப்புக்கள்

கனடாவில் கல்விகற்க/வேலைசெய்ய நிரந்தரமாக குடிபெயர விரும்பும் அனைவரும் தவறவிடக்கூடாத அரிய சந்தர்ப்பம்

வயதெல்லை :- 19 முதல் 50 வரை (C-308)

அனுமதி இலவசம்

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684

CAPIC ACCP

நாளை காலை 11 மணி
04-10-2020

CANADA MIGRATION PILOT
CIMS

CIMS COLLEGE, 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0777069777 / 0777068777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.